வெளியீடு: 23-3-2004 Issued: 23-3-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, பிப்ரவரி 11, 2004—தொகுதி 57—எண் 1

**Wednesday, the 11th February, 2004 – Volume 57 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

·ive Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

281/2004

**11–2–2004**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Governor and Council of Ministers | ix - xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii - xvi |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii - xxvii |
| **வரவு–செலவுத் திட்டம், 2004–2005, அளித்தல்–** | |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 1 - 58 |

D
V2111,3'g04
g04.57·1
185087

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:**

   பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறு பாசனம், உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும், ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு, சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், புத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி மற்றும் உணவு அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:**

   நிதி, திட்டமிடல், தேர்தல்கள் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.

4. சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:**

சட்டம், நீதிமன்றங்கள், தகவல் தொழில்நுட்பவியல், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

7. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

8. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன்.

9. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.



10. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:**

ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

11. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், துறைமுகங்கள்,

12. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல்.

13. ஊரகத் தொழில் துறை அமைச்சர் ,, **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம்.

14. வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:**

வணிக வரிகள் மற்றும் கூட்டுறவு.

15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் ,, **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்**

கால்நடை பராமரிப்பு.

16 வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

வனம், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

17. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:

வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ,, மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வஃக்பு.

19. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

20. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:

கைத்தறி மற்றும் துணித் தொழில்.

21. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:

மீன்வளம்.

22. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. மில்லர்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

23. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. அண்ணாவி:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.



24. செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:

செய்தி & விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம். செய்தித்தாள் கட்டுப்பாடு, நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

25. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்:

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன்.

-------

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance and Food** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics. |
| 4. **Minister for Law, Information Technology and Electricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts, Information Technology, Electricity and Non-conventional Energy Development. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

6. **Minister for Education** .. **The Hon. Thiru S. Semmalai:**

Education, Technical Education, Science and Technology, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees.

7. **Minister for Health** .. **The Hon. Thiru N. Thalavai Sundaram:**

Health, Medical Education and Family Welfare.

8. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru R. Jeevanantham:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities

9. **Minister for Social Welfare** .. **The Hon. Tmt. B. Valarmathi:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration.

10. **Minister for Adi-Dravidar Welfare** .. **The Hon. Thiru C. Karuppasamy:**

Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen.

11. **Minister for Transport** .. **The Hon. Thiru R. Viswanathan:**

Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports.

12. **Minister for Industries** .. **The Hon. Thiru Nainar Nagenthran:**

Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics.



13. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru K. Pandurangan:**

Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board.

14. **Minister for Commercial Taxes and Co-operation** .. **The Hon. Thiru Se.Ma. Velusamy:**

Commercial Taxes and Co-operation.

15. **Minister for Animal Husbandry** .. **The Hon. Thiru P.V. Damodhiran:**

Animal Husbandry.

16. **Minister for Forests and Environment** .. **The Hon. Thiru R. Vaithilingam:**

Forests & Environment and Pollution Control.

17. **Minister for Housing and Urban Development** .. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:**

Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and C.M.D.A.

18. **Minister for Labour** .. **The Hon. Thiru C.Ve. Shanmugam:**

Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs.

19. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru S. Ramachandran:**

Milk and Dairy Development.

20. **Minister for Handlooms and Textiles** .. **The Hon. Thiru V. Somasundaram:**

Handlooms and Textiles.

21. **Minister for Fisheries** .. **The Hon. Thiru M. Radhakrishnan:**

Fisheries.

22. **Minister for Tourism** .. **The Hon. Thiru A. Miller:**

Tourism and Tourism Development Corporation.

23. **Minister for Agriculture** .. **The Hon. Thiru P. Annavi:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

24. **Minister for Information & Publicity and Local Administration** .. **The Hon. Thiru K.P. Anbalagan:**

Information & Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural-indebtedness, Urban and Rural Water Supply.

25. **Minister for Sports and Youth Welfare** .. **The Hon. Thiru Inbathtamilan:**

Sports and Youth Welfare.

------



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

*மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து*

### பேரவைத் துணைத் தலைவர்

*மாண்புமிகு திரு. அ. அருணாசலம்*

### மாற்றுத் தலைவர்கள் #

*திரு. சி. சிவசாமி*

*திரு. வி. ஜெயராமன்*

*திருமதி சி.எம். சூரியகலா*

*திரு. லா. சந்தானம்*

*டாக்டர் தே. குமாரதாஸ்*

*திரு. செ.கு. தமிழரசன்*

### செயலாளர்

*திரு. வெ. இராசாராமன்*

---

*# 5—2—2004 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | - பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ., | - குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - தலைமை நிருபர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| செல்வி சு. வத்சலா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

—



## பேரவை உறுப்பினர்கள்

## (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | - திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | - ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | - தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | - தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | - திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | - அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | - வரகூர் (செ.வ.) |
| 9. | அருள், திரு. பி.எஸ். | - புவனகிரி |
| 10 | அழகம்மாள், திருமதி வி. | - தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சி. | - பெரணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | - நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | - தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | - இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | - வேடசந்தூர் |

20. ஆறுமுகம், திரு. கே. .. செங்கல்பட்டு
21. ஆறுமுகம், திரு. த. .. திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. .. நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. .. திருத்தணி
25. இராசேந்திரன், திரு. சி. .. திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. .. கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
31. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத்தமிழன், திரு. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
48. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. .. குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. .. தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)

67. கிருஷ்ணன், திரு. ஆர். - அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. - கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. - ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. - முகையூர்
71. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். - விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. - கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். - அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். - ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. - ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. - பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. - உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். - இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. - சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. - சிவகங்கை
86. சம்பத், திரு. எம்.சி. - நெல்லிக்குப்பம்
87. சரவணன், திரு. துரை. கி. - சிதம்பரம்
88. சரோஜா, திருமதி இரா. - உப்பிலியாபுரம் (ஆ.வா.)
89. சாமி, திரு. ஆர். - மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்



91. சிதம்பரம், திரு. ப. - பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. - தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. - அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. - திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். - கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. - பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். - திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. - கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. - திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். - ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. - மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. - கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். - கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். - குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. - ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. - மருங்காபுரி
110. செல்வம், திரு. எஸ்.கே. - வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. - மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி - காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். - திருவெறும்பூர்

114. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

115. சோமசுந்தரம், திரு. வி. - உத்திரமேரூர்

116. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. - திருநாவலூர்

118. தமிழரசன், திரு. செ.கு. - நன்னிலம் (செ.வ.)

119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி - மேல்மலையனூர்

120. தம்பிதுரை, டாக்டர் மு. - பர்கூர்

121. தவமணி, திரு. க. - திருவிடைமருதூர்

122. தளவாய் சுந்தரம், திரு. ந. - கன்னியாகுமரி

123. தனபால், திரு. ப. - சங்கரி (செ.வ.)

124. தாமோதரன், திரு. எஸ். - விருதுநகர்

125. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு

126. தாமோதிரன், திரு. ப.வெ. - பொங்கலூர்

127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி

128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். - காஞ்சிபுரம்

129. துரைமுருகன், திரு. - காட்பாடி

130. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி

131. தென்னரசு, திரு. கே.எஸ். - ஈரோடு

132. நடராஜன், திரு. அ. - குத்தாலம்

133. நடராஜன், திரு. எஸ். - நாட்ராம்பள்ளி

134. நடராஜன், திரு. பி.கே.டி. - ஆத்தூர்

135. நடராசன், திரு. வது. - இளையான்குடி

136. நயினார் நாகேந்திரன், திரு. - திருநெல்வேலி



137. நரசிம்மன், திரு. பி.எம். - பள்ளிப்பட்டு

138. நளினி மனோகரன், திருமதி - போளூர்

139. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு

140. நீலகண்டன், திரு. ப. - ஆற்காடு

141. நீலமேகவர்ணம், திரு. லெ. - சாத்தான்குளம்

142. நெப்போலியன், திரு. து. - வில்லிவாக்கம்

143. பச்சைமால், திரு. தா. - குளச்சல்

144. பதினெட்டாம்படியான், திரு. க. - முதுகுளத்தூர்

145. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-I

146. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

147. பவானி கருணாகரன், திருமதி கே. - அரக்கோணம் (செ.வ.)

148. பழனிசாமி, திரு. கே.எஸ். - பெருந்துறை

149. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)

150. பழனியப்பன், திரு. பெ. - மொரப்பூர்

151. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

152. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

153. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு

154. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை

155. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)

156. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி

157. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி

158. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்

159. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
160. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
161. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
162. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
163. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
164. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
165. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
166. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
167. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
168. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
169. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
170. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
171. போளூர் வரதன், திரு. - செங்கம் (செ.வ.)
172. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
173. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
174. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
175. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
176. மணி, திரு. டி. - விளவங்கோடு
177. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
178. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
179. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
180. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
181. மில்லர், திரு. அ. - கூடலூர்



182. முரளிதரன், திரு. கே.வி. - தளி
183. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
184. முருகேசன், திரு. ஆ.கு. - ஆத்தூர்
185. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
186. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
187. மோகன், திரு. ப. - சின்னசேலம்
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
192. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
193. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
194. ராமசாமி, திரு பி.சி. - மொடக்குறிச்சி
195. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
196. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
197. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி
198. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி
199. ராஜா, திரு. எச். - காரைக்குடி
200. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்
201. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்
202. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்
203. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்
204. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு

205. வியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி
206. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி
207. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்
208. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு
209. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
210. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்
211. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
212. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்
213. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்
214. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை
215. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி
216. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை
217. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி
218. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-I
219. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
220. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
221. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
222. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி
223. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்
224. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
225. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்
226. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி



227. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)
228. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
229. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி
230. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
231. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
232. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி
233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு
234. வெற்றிடம் - மங்களூர் (செ.வ.)
235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## தை 28, சுபானு – திருவள்ளுவர் ஆண்டு 2035

## 2004 பிப்ரவரி 11, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பிற்பகல் 2—30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*“அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்*
*செல்வச் செவிலியால் உண்டு”*

*அன்பு என்கிற அன்னை பெற்றெடுக்கும் அருள் என்கிற குழந்தை, பொருள் என்கிற செவிலித் தாயால் வளரக் கூடியதாகும்.*

### வரவு–செலவுத் திட்டம், 2004–2005, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2004—2005 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை அளித்தல். மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்*
*கிடும்பை படாஅ தவர்.*

*(துன்பம் வருங்கால் அதற்கு இரையாகாது, தளரா உள்ளத்துடன், எதிர்நோக்குபவர் முன் அத்துன்பமே நலிவுற்றுத் துயருற்று அஞ்சிப் பின்வாங்கிச் சென்று விடும்.)*

(A person who does not meekly succumb to adversity but who faces it with unfailing heart will be able to cause the adversity itself to suffer its own weakness and quietly depart.)

*சீரிய சிந்தனையும் மனஉறுதியும் தெளிந்த தொலைநோக்குப் பார்வையும் பேராற்றலும் கொண்டு தமிழ்நாட்டை வளமிக்க வளர்ச்சிப்*

பாதையில் மீண்டும் நிலை நிறுத்திய எங்களது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது நல்லாசியுடன் (மேசையைத் தட்டும் ஒலி) 2003—2004 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளையும், 2004—2005 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்ட மதிப்பீடுகளையும் இம்மாமன்றத்தின் முன்வைக்க நான் விழைகின்றேன்.

தமிழ்நாடு கடந்த காலத்தில் எய்திய பெரும் புகழ், பலமுனை வளர்ச்சி மற்றும் வளமான நிலை ஆகியவற்றிற்கு மீண்டும் திரும்பும் என்கின்ற நம்பிக்கையுடன், தமிழ்நாட்டு மக்கள், 2001 மே திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதயதெய்வம் அம்மா அவர்களுக்கு பிரம்மாண்ட வெற்றியை அளித்து மீண்டும் பொறுப்பேற்கச் செய்தனர். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று அவர்களுடைய எதிர்பார்ப்புகளும், கனவுகளும் ஈடேறியுள்ளன. வளர்ச்சியினை ஒட்டுமொத்தமாக நிலைகுலையச் செய்து சீரழியச் செய்யும் நிதிச் சரிவுகண்ட துன்பம்மிக்க 1990 ஆம் ஆண்டுகளின் பின்பகுதியை தமிழ்நாடு கடந்து வந்துள்ளது. மிகப் பாதகமான சூழ்நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உறுதியான முடிவுடனும், முழுமையான ஈடுபாட்டுடனும், தெளிவான சிந்தனையுட்னும் அரசின் நிதிநிலையைச் சீர்செய்ய மாபெரும் முயற்சியினை மேற்கொண்டுள்ளார்கள். இம்முயற்சியின் பயன்கள் வியக்கத்தக்க வகையில் அமைந்துள்ளன. தமிழ்நாடு குறிப்பிடத்தக்க வகையில் நிதிநிலை திருப்பத்தை எய்தியுள்ளது. வளர்ச்சிக் கோட்பாடுகள் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் மீண்டும் முன்னிறுத்தப்பட்டுள்ளன. மூன்றாண்டுகளுக்கும் மிகக் குறைவான கால அளவுக்குள் இச்சாதனை எய்தப்பட்டுள்ளது. இது, எங்களுடைய தலைவி மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் திறமைவாய்ந்த ஆற்றல்மிகு தலைமையின் கீழ் இந்த அரசு எய்திய குறிப்பிடத்தக்க சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

2001 ஆம் ஆண்டு மே திங்களில் நிலவிய சரி செய்ய இயலாததாக தோற்றமளித்த நிதி நிலைமையினை மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுகூரலாம். தொடர்ந்து மூன்றாண்டுகளாக பருவமழை பொய்த்து அதன் விளைவாக, 2002—2003 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வறட்சி, நிதி நிலைமையைச் சீர் செய்வதற்கான நடவடிக்கையை மேலும் சிக்கலாக்கியது. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், செயலிழக்கச் செய்யும் இத்தகைய இன்னல்களைக் கடந்து இம்மாநிலத்தை இருளிலிருந்து ஒளிமயமான பாதைக்கு தன்னிகரற்ற தலைவியாக முன்னின்று நடத்திச் சென்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)





பிற்பகல் 2—35

மக்களின் வாழ்க்கைத் தரத்தில் பொருளார்ந்த மேம்பாடுகளை உறுதிசெய்வதே, ஆளுகையின் முடிவான நோக்கமாகும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்போதும் கருத்தில் கொண்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் 15 அம்சத் திட்டம், இந்நோக்கத்தை உள்ளடக்கியதாக இருப்பதுடன், இம்மாநிலத்தின் வளர்ச்சி இலக்குகளைக் குறிப்பிடும் வகையிலும் அமைந்துள்ளது. இவை அனைத்தும், நிதிச் சீர்திருத்தங்கள், முதலீட்டுச் சூழ்நிலைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், நல்ல நிருவாகம் வாயிலாக சேவைப்பணிகளை மேம்படுத்துதல், வறுமைக் குறைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்தப் பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டத்தின்மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வலுவான தலைமையினாலும், ஒவ்வொரு நிலையிலும் சட்டம்—ஒழுங்கை நிருவகிப்பதில் அவர்கள் மேற்கொண்ட தனிக் கவனத்தினாலும் மட்டுமே, தமிழ்நாடு இடர்ப்பாடற்ற அமைதி நிலவும் பூங்கா எனப் போற்றப்படுகிறது. இதனால், நிதி நிலைமையை சரிசெய்து பொருளாதாரத்தைச் சீரமைக்க உதவுவதற்கேற்ற சிறந்த அடித்தளம் அமைந்துள்ளது.

## நடுத்தரக்கால நிதிநிலைத் திட்டம்

பொது நிதியை முறையாக நிருவகிப்பதில் அரசு உறுதியாக இல்லையெனில், மாநிலத்தின் வளர்ச்சி இலக்குகளை எய்துதல் மற்றும் மக்கள் நலன் பெருமளவு பாதிக்கப்படும் என்பதை, தமிழ்நாட்டிற்கு, 1996—2001 ஆம் ஆண்டுக்கால அளவில் ஏற்பட்ட அனுபவம் காட்டுகிறது. 1990—களின் மத்திய காலம் வரை நிதிவகையில் நன்கு நிருவகிக்கப்பட்டிருந்த தமிழ்நாடு ஆழமான நிதி இடர்ப்பாடுகளில் சிக்கித் தவித்து, 2000—2001 ஆம் ஆண்டின் இறுதியில் சரிவுப் பாதையில் செல்லத் தொடங்கிவிட்டது என்பது காணப்பெற்றது. நிதி இடர்ப்பாடென்பது புதிதான ஒன்றல்ல என அடிக்கடி எண்ணப்பட்டு வருகிறது. ஆனால், துரதிருஷ்டவசமாக இந்த எண்ணம் உண்மையானதல்ல; இம்முறை நாம் எதிர்கொண்ட நிதி இடர்ப்பாடு இதற்கு முன்னர் எப்பொழுதும் உணர்ந்திராத ஒன்றாகும். கடன் சுமை அச்சமூட்டும் அளவிற்கு உயர்ந்துவிட்டது. இந்த இடர்ப்பாட்டினைச் சமாளிப்பதற்குத் தேவையான

கடன்பெற வாய்ப்பு அமையப் பெறவில்லை. ஒட்டுமொத்தச் சீர்குலைவைத் தடுக்க இந்த அரசு விரைவாகவும், தெளிவான முடிவுடனும் செயல்பட வேண்டியிருந்தது. வறியோர் மீது எவ்விதச் சுமையையும் ஏற்றாது, இது மதிநுட்பத்துடன் செய்து முடிக்கப்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கு சீராக பராமரிக்கப்படும் என்ற உத்தரவாதம் இல்லையெனில் வளர்ச்சிக்கான புதிய உத்வேகம் அமையப் பெறாது.

2001—2002 ஆம் ஆண்டிற்கான திட்ட முதலீட்டினை ரூபாய் 6,040 கோடியிலிருந்து ரூபாய் 5,200 கோடியாக குறைக்க வேண்டிய கட்டாயம் அரசுக்கு ஏற்பட்டது என்பதை இம்மாமன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுகூரலாம். முந்தைய அரசு கொடுக்கத் தவறிய ரூபாய் 4,000 கோடிக்கு மேற்பட்ட செலவுப் பொறுப்பினையும் நாம் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இத்தோடு, அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளம் மற்றும் ஓய்வூதிய நிலுவைத் தொகையாக ரூபாய் 1,800 கோடி 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்கு அப்பால் கொடுக்கப்படும்படி முடக்கப்பட்டிருந்தது. தமிழ்நாட்டிற்கு 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரைக்கும் கிடைக்கப்பெற வேண்டிய லிக்னைட் உரிமைத் தொகை ரூபாய் 250 கோடியையும் முந்தைய அரசு 2001 மார்ச் திங்களிலேயே முன்னதாகப் பெற்றுவிட்டது. ஆளுகையின் அடிப்படைக் கோட்பாடு இழக்கப்பட்டதுடன், மக்களின் அடிப்படை வளர்ச்சித் தேவைகளை நிறைவு செய்வதில் மாநிலத்தின் நம்பகத் தன்மைகூட கேள்விக்குறியாக ஆகிவிட்டிருந்தது.

மூன்றாண்டுகளுக்கும் குறைவான கால அளவில், 2001 ஆம் ஆண்டில் நிலவிய முன்னெப்போதும் இருந்திராத பிரச்சினைகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெற்றிகரமாகத் தீர்வு கண்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முற்றிலும் புதிய, துணிச்சலான தொலைநோக்குப் பார்வை கொண்ட வளர்ச்சிப் பொருள்நிரல் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. மாநிலங்களிடையே தமிழ்நாடு தனக்குரிய முதலிடத்தை அடையச் செய்யும் வகையில் இது செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொது நிதியை உரிய முறையில் நிருவகிப்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உறுதிப்பாட்டினால்தான் இச்சாதனைத் திருப்பம் சாத்தியமாகியுள்ளது. நம்பிக்கையற்றதென கைவிடப்பட்ட சூழ்நிலையைச் சீர்செய்தமைக்கு, தொலைநோக்குப் பார்வைகொண்ட எங்களது தலைவிக்கு இத்தருணத்தில் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 2—40

கடந்த நிதியாண்டில், 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டம் நிறைவேற்றப்பட்டதை மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் நினைவுகூரலாம். பொது நிருவாகத்தில் ஒளிவுமறைவற்ற தன்மையை உறுதி செய்வதற்கும், தகுந்த பொறுப்புடைமைக்கும் 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் அன்று திருத்தியமைக்கப்பட்ட இச்சட்டம் ஒரு வழிகாட்டிச் சின்னமாகிவிட்டது. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் சீர்திருத்தங்களுக்கும் ஏற்றதொரு செயல் திட்டத்தைக் கோடிட்டுக் காட்டும் நடுத்தரக்கால நிதிநிலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்துச் சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கும் பொறுப்பை இச்சட்டம் அரசுக்குக் கொடுத்துள்ளது.

மேற்குறிப்பிட்ட பொறுப்பினை நிறைவேற்றும் வகையில், நடுத்தரக்கால நிதிநிலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வரவு—செலவுத் திட்ட உரையுடன் இணைக்கப்பட்டுள்ளது. நடுத்தரக் கால நிதித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சீர்திருத்த மற்றும் வளர்ச்சி இலக்குகளின் அடிப்படையில் இந்த வரவு—செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் முக்கிய அம்சங்கள் வருமாறு:

- இத்திட்டம் 2008—2009 ஆம் ஆண்டிற்குள் வருவாய்ப் பற்றாக்குறையினை அறவே நீக்கிட இலக்கிட்டுள்ளது. ஆதாயமற்ற வருவாய் செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் கூடுதலான வருவாய் வரவுகளை உறுதி செய்வதன் மூலமும் இதனை எய்த வேண்டும்.
- அரசின் நிகரக் கடன் பொறுப்புகளைக் குறிக்கும் நிதிப் பற்றாக்குறையானது, நீடித்த முன்னேற்றத்தை உறுதி செய்வதற்கான ஒரு வழிவகையாக, 2008—2009 ஆம் ஆண்டிற்குள் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்குக் குறைவாகக் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.
- மூலதனச் செலவை 2002—2003 ஆம் ஆண்டிலிருந்த ரூபாய் 1891.50 கோடி என்ற அளவிலிருந்து தொடர்ந்து அதிகரிக்கச் செய்திட அரசு முயலும். சாலைகள், பாலங்கள், குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுதல் போன்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட இந்த முன்னுரிமைப்பாடு வகை செய்யும்.

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

- உருவாக்கப்பட்டுள்ள சொத்துக்களை சரிவரப் பராமரிப்பதை உறுதி செய்வதற்காக பராமரிப்பு மற்றும் இயக்கப் பணிகளுக்குக் கூடுதல் முன்னுரிமை அளிக்கப்படும்.
- ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்த இவ்வரசு கொண்டுள்ள உறுதிப்பாடு இத்திட்டத்தின் ஒருங்கிணைந்த கோட்பாடாக அமையும்.
- மொத்தத்தில், வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட பொருளாதாரச் சீர்திருத்தத் திட்டத்துடன் இணைந்த நடுத்தர கால நிதிநிலைத் திட்டமானது சமுதாயத்தில் வாய்ப்புரிமை இழந்தோர், வறியோர் ஆகியோரது நலனைப் பாதுகாத்து வளர்ச்சி நடைமுறைகளில் அவர்களுக்கு பங்கேற்பு உரிமையை அளிக்கும் வகையில் பொருளாதார உயர் வளர்ச்சி வீதத்தினை அடைய உதவும்.
- "அனைவருக்கும் வளர்ச்சி" என்பதே இச்சீர்திருத்தத் திட்டத்தின் குறிக்கோளாகும்.

இந்தியப் பொருளாதாரமும், தமிழகத்தின் பொருளாதாரமும் 2002—2003 ஆம் ஆண்டில் வறட்சியின் கடுமையால் பெரிதும் பாதிக்கப்பட்டன. நடப்பு விலை நிலவரத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் 2001—2002 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2002—2003 ஆம் ஆண்டில் 3.46 சதவீதம் ஆக இருந்தது. வறட்சியினால் பாதிக்கப்பட்ட முதன்மைத் துறையின் உற்பத்தி அளவுகளில் ஏற்பட்ட கடுமையான சரிவு, காவிரியில் நமக்குச் சட்டப்படி உரிமையுள்ள பங்கு நீரை விடுவிக்க மறுப்பதில் கர்நாடகத்தின் விட்டுக் கொடுக்காத போக்கு, அனைத்துத் துறைகளையும் பாதித்த உலக அளவிலான பொருளாதாரப் பின்னடைவு, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்ட சரிவுக்குக் காரணங்களாகும்.

2003—2004 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சி வாய்ப்புகள் ஊக்கம் அளிப்பதாக உள்ளன. 2003—2004 ஆம் ஆண்டில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சி 2002—2003 ஆம் ஆண்டில் இருந்ததைவிட தற்போதைய விலை நிலவர அடிப்படையில் 7.17 சதவீதமாக இருக்குமென்று தற்போது எதிர்பார்க்கப்படுகிறது. 2002—2003 ஆம் ஆண்டில் வறட்சியினால் ஏற்பட்ட சீரழிவுகளிலிருந்து தற்போது பொருளாதாரம் மீண்டு வருகிறது என்பது தெளிவு. 2003 ஆம் ஆண்டில் பருவகாலச் சூழ்நிலைகள் முற்றிலும் திருப்தி அளிப்பதாக இல்லையெனினும், பெரும் பிரச்சினைகளைத் திறம்படக் கையாண்டதால் பொருளாதாரம் மீண்டும் உயிரோட்டம் பெற்றுள்ளது.



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

## 2004-2005 ஆம் ஆண்டிற்கான வளர்ச்சிக் கோட்பாடுகள்

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் 15—அம்சத் திட்டத்தின் வாயிலாக "அனைவருக்கும் சுகாதாரமான மற்றும் ஆக்க வளமுடைய வாழ்க்கைக்கான வாய்ப்புகளை" அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கொண்டுள்ள உறுதிப்பாடு, 2004—2005 ஆம் ஆண்டின் வளர்ச்சிப் பணிகளுக்கான பொருள் நிரலில் ஒருங்கிணைந்த கோட்பாடாக அமையும். இந்த வளர்ச்சிப் பணி குறித்த பொருள் நிரலில் பின்வருபவை அடங்கும்.

பிற்பகல் 2—45

- புதிய மதிப்புக்கூட்டு நடைமுறைகளைக் கையாளும் மாற்றுப் பயிர்த் திட்டம், நீரைத் திறமையாகப் பயன்படுத்தல், துல்லிய பண்ணை முறை, புதிய பாசன ஆதாரங்களை உருவாக்க வேளாண்மையில் முதலீடுகள், வீட்டுப் பண்ணைத் திட்டத்தை ஊக்குவித்தல், மீனள மேம்பாடு, ஒட்டுமொத்த ஊரகக் கட்டமைப்பு வசதி மேம்பாடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, 2003—2004—ஆம் ஆண்டில் முதன்மைத் துறையில் காணப்பட்ட பொருளாதார முன்னேற்றம் மேலும் வலுப்படுத்தப்படும்.
- முதலீட்டுக்கு உகந்த சூழ்நிலையை மேம்படுத்துவதற்கேற்ற சீர்திருத்தங்கள், குறிப்பாக உற்பத்தித் துறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். தரமான மின் வழங்கல், வரிவிதிப்பு சீர்திருத்தங்கள், தொழிலாளர் துறை சீர்திருத்தங்கள், நிருவாக நடவடிக்கைகளில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய கட்டமைப்பு மேம்பாடுகளுக்குப் புதிய உத்வேகம் அளிப்பதும் இதில் அடங்கும்.

- தற்போது முன்னேறி வரும் துறைகளான தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா மேம்பாடு போன்றவைகளில் தமிழ்நாடு பெற்றுள்ள உள்ளார்ந்த வல்லமை (Core Competence) மேம்படுத்தப்படும்.
- மின்னணுவழி நிருவாகத்தின் மூலம் நல்லாளுமையை உறுதி செய்யும் ஒரு முக்கிய அங்கமாக, பொதுமக்கள் தொடர்பு மிகுந்துள்ள பத்து முக்கிய சேவைப் பணிகளில் பணித்திறனை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- புத்தாயிரம் வளர்ச்சி இலக்குகளை எய்துவதற்காக மனிதவள மேம்பாட்டிற்கு உயரிய முக்கியத்துவம் அளிக்கப்படும்.
- ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையம் வலுவூட்டப்படும்.
- வறுமைக் குறைப்புக்கான புதியதொரு செயல் திட்டம் மேற்கொள்ளப்படும்.

## ஆண்டுத் திட்டம்

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு (2002—2007) ரூபாய் 40,000 கோடி ஒதுக்கீட்டில் வளர்ச்சித் திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் மத்திய திட்டக் குழுவின் அனுமதியைப் பெற்றுள்ளார்கள். 2001—2002 ஆம் ஆண்டு பொது நிதியின் இடர்ப்பாடான நிலைமையைக் கருத்தில் கொண்டு பார்த்தால் இது ஒரு மாபெரும் சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) 2001—2002 ஆம் ஆண்டில் ரூபாய் 5,200 கோடியாக இருந்த ஆண்டு வளர்ச்சித் திட்ட ஒதுக்கீட்டை 2003—2004 ஆம் ஆண்டில் ரூபாய் 7,000 கோடியாக உயர்த்திப் பெற்றது இந்த அரசின் வியத்தகு சாதனை ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனைத் தொடர்ந்து 2003—2004 ஆம் ஆண்டிற்கான ரூபாய் 7,000 கோடி என்ற திட்ட இலக்கு முழுவதுமாக எய்தப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த வரவு—செலவுத் திட்டம் முன்னெப்போதுமிருந்திராத ரூபாய் 8001 கோடி அளவிற்கான ஆண்டுத் திட்டத்தை உள்ளடக்கியுள்ளது. 2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 8,001 கோடி என்ற இந்த உயரளவு வளர்ச்சித் திட்டத்திற்கான ஒதுக்கீட்டிற்கு ஒப்புதலைப் பெற மத்திய



திட்டக் குழுவினை நாங்கள் அணுகுவோம். 2001—2002 ஆம் ஆண்டு ஒதுக்கீடான ரூபாய் 5,200 கோடியுடன் ஒப்பிடும்போது, மாநில அரசின் வளர்ச்சிப் பணி குறித்த செலவு பெருமளவு உயர்த்தப்பட்டிருப்பதை இது காட்டுகிறது.

## பன்னிரண்டாவது நிதிக் குழு

2005—2010 கால அளவில் மத்திய அரசின் நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிப்பதைத் தீர்மானிக்கும் கொள்கைகளைப் பரிந்துரை செய்வதில் பன்னிரண்டாம் நிதிக் குழு முக்கிய பங்கு வகிக்கிறது. அண்மைக் காலங்களில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் வருவாய் ஆதார நிலைமை மற்றும் வளர்ச்சிப் பொறுப்புக்கள் ஆகியவற்றில் குறிப்பான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மாநில அரசுகள் செயலாக்க வேண்டிய மேம்பாட்டுக் கடமைப் பொறுப்புகளை அதிகரிக்கச் செய்யும் திட்டவட்டமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ள போதிலும், அவற்றிற்குக் கிடைக்கும் நிதி ஆதாரங்கள் அதற்கேற்ற அளவு அதிகரிக்கவில்லை. மாநிலங்களுக்கு நியாயமாகச் சேரவேண்டிய சேவைப் பணிகள் மீதான வரி மத்திய அரசின் அதிகார வரம்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதனை நாங்கள் எதிர்த்துள்ளோம். மாநிலங்களுக்குக் கிடைக்கும் மத்திய அரசின் வரிகளின் பங்கீட்டுத் தொகுதியை நியாயமான மற்றும் கணிசமான அளவு அதிகரிக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் தற்போது முன்னிறுத்தப்பட வேண்டியதாகிறது. பகிர்ந்தளிக்கக்கூடிய மத்திய வரிப்பகிர்வுத் தொகுப்பில் மாநிலங்களுக்கிடையே பிரித்தளிப்பதை நிர்ணயிக்கும் கொள்கைக் கூறுகளை முடிவு செய்வது இரண்டாவது பிரச்சினையாகும்.

மத்திய வரிகளில் நமது மாநிலத்தின் பங்கு 6.637 சதவீதத்திலிருந்து 5.385 சதவீதமாக பதினோராம் நிதிக் குழு குறைத்ததால் தமிழ்நாடு கடுமையான பாதிப்பிற்குள்ளாகியது. இது 1.252 சதவீதக் குறைவு அல்லது ஆண்டிற்காண்டு வித்தியாச அடிப்படையில் 18.86 சதவீதக் குறைவு என்றாகிறது. இதன் விளைவாக 2001—2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு ரூபாய் 781 கோடி இழப்பு ஏற்பட்டது. மேலும் அவ்வாண்டில், மத்திய வரிகளிலிருந்து, இம்மாநிலம் இவ்வாறு குறைத்து நிர்ணயிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் இறுதியாகப் பெற்ற தொகை ரூபாய் 512 கோடி. மொத்தக் குறைப்பு ரூபாய் 1,293 கோடியாகும். நிதி நிலை ஆதாரங்களில் இந்த அளவு குறைப்பினால் ஏற்பட்ட அதிர்ச்சியினை எந்த ஒரு மாநிலத்தினாலும் தாங்கிக் கொள்ள இயலாது.

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

இந்த மாபெரும் பின்னடைவை எதிர்கொள்வதற்கு நாங்கள் முயன்றுள்ளோம்.

பிற்பகல் 2—50

விரிவான நிதி நிலைக் குறிப்பு, எதிர்காலக் கணிப்பு மற்றும் பன்னிரண்டாவது நிதிக் குழு கோரிய ஏனைய தகவல்களைக் குழுவிற்கு அளித்துள்ளோம். 2005—2010 கால அளவில் மத்திய அரசின் நிதி ஆதாரங்களை மாநிலங்களுக்குப் பிரித்தளிக்க வேண்டியதில் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகளை அதில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளோம்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அரசுக்கும், 12—வது நிதிக் குழுவின் தலைவர் பொருளாதார வல்லுநர் டாக்டர் சி. ரங்கராஜன் மற்றும் ஏனைய குழு உறுப்பினர்களுக்கும் இடையேயான கூட்டம் 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் நாள் அன்று சென்னையில் நடைபெற்றது. மத்திய—மாநில அரசுகளுக்கிடையே நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான கொள்கைகளை முற்றிலுமாக மாற்றி அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிக் குழுவிடம் கோரியுள்ளார். பன்னிரண்டாவது நிதிக் குழுவிடம் இந்த அரசு தெரிவித்த கருத்துக்களின் முக்கிய அம்சங்களைக் கோடிட்டுக் காட்ட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள விழைகிறேன்.

• **மத்திய அரசு அதன் வரிகளை மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு:** மத்திய வரித் தொகுப்பில் இருந்து மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் தொகுதியின் அளவை தற்போதுள்ள 29.5 சதவீதம் என்பதிலிருந்து 50 சதவீதமாக உயர்த்தி அளிக்குமாறு இந்த அரசு கோரியுள்ளது.

• **மாநிலங்களுக்கிடையே மத்திய வரிகளைப் பகிர்ந்தளித்தல்:** மத்திய வரிகளை மாநிலங்களுக்கிடையே பின்வரும் கோட்பாட்டுகளின் அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்படுவதை உறுதிசெய்யுமாறு பன்னிரண்டாவது நிதிக் குழு கோரப்பட்டுள்ளது.

• 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் மக்கள் தொகைக்கு 40 சதவீதம்.

• வரி நடவடிக்கைகளுக்கு 40 சதவீதம் (மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் வரிகளின் பங்கு சதவீதமாக)



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

• 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகையை கணக்கில் கொண்ட தனிநபர் மாநில மொத்த உற்பத்தி மதிப்பு மாநிலங்களுக்கிடையேயான இடைவெளியின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு அதற்கு 10 சதவீதம்.

• மத்திய வரியில் மாநிலத்தின் பங்கிற்கு 10 சதவீதம்.

• கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதிலும், வட்டிச் சுமையைக் குறைப்பதிலும் மாநிலத்திற்குப் பெரும் நிவாரணம் அளிக்கும் வகையிலான ஒட்டுமொத்தக் கடன் குறைப்புத் திட்டம் ஒன்றை வகுக்குமாறு பன்னிரண்டாவது நிதிக் குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது.

• இயற்கைச் சீற்றங்களின்போது மக்களுக்கு நிவாரணமும் உதவியும் அளித்திட மாநில அரசு உரிய நேரத்தில் பயனளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில், பேரிடர் நிவாரண நிதியின் தொகையின் அளவினைக் கணிசமாக உயர்த்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

• உள்ளாட்சி மன்றங்கள் வழங்கும் பணிகளின் அளவையும் தரத்தையும் மேம்படுத்த, ரூபாய் 4,881 கோடி நிதி உதவி அளிக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

• மாவட்ட நிருவாகம், காவல் துறை, தீயணைப்பு—மீட்புப் பணிகள் துறை, சிறைச்சாலைகள், மின்னணு வழி நிருவாகம் போன்ற துறைகளோடு பிற துறைகளின் தரத்தினை மேம்படுத்த ரூபாய் 1,856.80 கோடி மானியம் வழங்குமாறு பன்னிரண்டாம் நிதிக் குழு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு எதிர்கொண்டுள்ள தனிப்பெரும் பிரச்சினைகள் குறித்தும் குழுவிடம் தெரிவிக்கப்பட்டன. குளங்கள், குட்டைகள், ஊரணிகள் போன்ற நீர் ஆதாரங்களைப் புனரமைத்தல், சென்னையில் தொடர்ந்து நீடித்துவரும் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்க்கும் வகையில் கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்துதல், குடிசைப் பகுதியினரை மறு குடியமர்த்தும் ஒட்டுமொத்தத் திட்டம் போன்ற தனிப்பெரும் பிரச்சினைகளைச் சமாளிக்க மாநில அரசுக்கு உதவிடும் வகையில் ரூபாய் 6,167.69 கோடி மானிய உதவி கோரப்பட்டுள்ளது.

**பன்னிரண்டாம் நிதிக் குழு கூட்டாட்சி நிதிப் பகிர்வு கோட்பாடுகளில் புதிய அத்தியாயத்தை** உருவாக்கும் என்றும், தமிழ்நாட்டு **மக்களின் தேவைகளுக்கும்** எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ற வகையில் அதன் **பரிந்துரைகள் அமையு**மென்றும் இந்த அரசு நம்புகிறது.

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

ஆண்டாண்டாக தொடர்ந்து வரும் தண்ணீர்ப் பற்றாக்குறைக்கான நிரந்தரத் தீர்வாக, கடல் நீரைக் குடிநீராக மாற்றும் திட்டம் அமையும் என்று நாங்கள் நம்புகிறோம். இதற்காக அடுத்த ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் தொடக்க நிதியாக ரூபாய் 10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் வரவு—செலவுத் திட்டத்தில் சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் ஒட்டுமொத்த குடிநீர் வழங்கும் திட்டங்களை செயல்படுத்துவதென்று அறிவிக்கப்பட்டதை நாங்கள் வரவேற்கிறோம். சென்னையில் தொடர்ந்து வரும் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்கக்கூடிய நீண்டகால ஒட்டுமொத்தத் தீர்வுகாண இதனை நாம் பயன்படுத்துவோம்.

வடகிழக்குப் பருவமழை பொய்த்துப் போனதனால் ஏற்பட்ட சூழ்நிலையைச் சமாளிப்பதில் இந்த அரசு எத்தகைய தளர்வும் கொள்ளாது என்று இம்மன்றத்திற்கு நான் உறுதியளிக்கிறேன். இந்த அரசு, அடுத்த நிதியாண்டிலும், பல்வேறு நிவாரண நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள இயலும் வகையில், வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில், ரூபாய் 200.98 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது.

**காவல் துறை**

குற்றம் புரிவதைத் திறமையாகத் தடுத்தல், சட்டத்தைத் திறம்பட செயல்படுத்துதல், சிறைச் சீர்திருத்தங்கள், கைதிகளுக்கு முறையான மறுவாழ்விற்கு வகைசெய்தல், நீதித் துறையில் விரைவான நடைமுறைகள் ஆகியவை, சட்டம்—ஒழுங்கைத் திறம்படப் பராமரிப்பதற்கான முக்கிய கூறுகளாகும். இந்த அரசு இவை அனைத்தையும் முறையாக முழுமையாக நிருவகித்துள்ளது.

பிற்பகல் 3—00

நடப்பாண்டின் திருத்த மதிப்பீட்டில் காவல் துறைக்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 1262.60 கோடி என்றிருக்க, 2004—2005 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1327.15 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதில், காவல் துறையை நவீனப்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள ரூபாய் 112 கோடியும் அடங்கும். ரூபாய் 30 கோடி மதிப்பீட்டுச் செலவில், காவல் துறைத் தலைவரின் அலுவலக வளாகம் கட்டுவதற்காக ரூபாய் 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

**சிறைச்சாலைகள்**

சிறைச்சாலைகளுக்காக, இவ்வாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 76.80 கோடி நிதியொதுக்கியிருக்க, 2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 117.05 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

ரூபாய் 77.09 கோடி செலவில் புழலில் புதிய சிறை வளாகம் ஒன்றினைக் கட்டுவதற்கான பணி விரைவாக நடந்தேறி வருகிறது. இதற்காக ரூபாய் 47.09 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தும் திட்டம் 2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 11.19 கோடி நிதியொதுக்கத்துடன் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

**நீதித் துறை**

இந்த அரசின் ஆட்சிக்காலத்தில் நீதி நிருவாகத்தை மேம்படுத்துவதற்கான ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கான மொத்த ஒதுக்கீடு 2001—2002 ஆம் ஆண்டில் ரூபாய் 140.99 கோடியிலிருந்து 2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 171.89 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தைக் கணினி மயமாக்குவதற்கும் ஏனைய நீதிமன்றங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும் தேவையான நிதி ஒதுக்கியுள்ளோம். உச்ச நீதிமன்றம் பிறப்பித்திருந்த ஆணைகளின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள சார்நிலை நீதிமன்றங்களில் திருத்திய சம்பள வீதங்களையும் இந்த அரசு செயல்படுத்தியுள்ளது. மதுரையில் உயர் நீதிமன்றக்கிளை 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13—ந் தேதி துவக்கப்படும்.

**புத்துயிர் பெற்ற முதன்மைத் துறையை நோக்கி வேளாண்மை**

முதன்மைத் துறைக்குப் புதிய நீடித்த வளர்ச்சி வேகத்தை முடுக்கிவிடுவதை நோக்கமாகக் கொண்ட துணிச்சலான பல்முனை வளர்ச்சி செயல் திட்டம் ஒன்றை இந்த அரசு செயல்படுத்தி வருகின்றது. இந்த அணுகுமுறையில் அடங்கியுள்ளவையாவன:

- மாற்றுப் பயிர்த் திட்டம்.
- ஒட்டுமொத்த தரிசுநில மேம்பாடு.
- திறன்மிக்க நீர்ப்பயன்பாட்டை ஊக்குவித்தல்.

- துல்லிய பண்ணையியல்.
- புதிய தொழில்நுட்பங்களை மேற்கொள்ளுதல்.
- தகவல்களை விரைந்து பகிர்ந்து கொள்வதற்கு தகவல் தொழில்நுட்பத்தை கையாளுதல்.
- தாராள சந்தை மூலம் நல்ல விலை கிடைக்கச் செய்தல்.
- ஊரக பண்ணை சாராத் துறையில் கவனம் செலுத்துதல்.
- கூட்டுறவுக் கடன் கட்டமைப்பிற்குப் புத்துயிர் அளித்தல்.

இந்த அரசு, சுற்றுச்சூழலுக்கு ஏற்பில்லாத அதிக நீர் ஆதாரத்தைப் பயன்படுத்தும் பயிர்ச் சாகுபடி முறையை மாற்றி, குறைந்த நீரைக் கொண்டு அதிக மதிப்புள்ள பயிர்ச் சாகுபடியை மேம்படுத்தும் வகையில் விவசாயிகளை ஊக்குவிப்பதற்கு பெரும் முயற்சி எடுத்து வருகிறது. தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் மலர்கள் சாகுபடி பெருமளவில் பிரபலப்படுத்தப்பட்டு வருகின்றன. வீரிய ஒட்டுரக காய்கறிகள், தாவர எரிபொருள் மரங்கள் மற்றும் மூலிகைப் பயிர்களின் சாகுபடிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு துல்லிய பண்ணையும் மற்றும் நவீன வேளாண் தொழில்நுட்பங்களில் வயல்வெளிப் பயிற்சி அளிக்கும் வகையில் வரும் நிதியாண்டில் மாதிரி தோட்டக்கலை கிராமங்கள் ஏற்படுத்தப்படும்.

இந்த அரசு மாநிலத்தின் பல பகுதிகளில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை ஏற்படுத்தி வருகிறது. வகைப்படுத்தப்பட்ட மலர்களின் ஏற்றுமதிக்காக ஓசூரில் ஒரு வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூபாய் 25 கோடி மதிப்பில் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மலர்களுக்கென நீலகிரியில் மற்றொரு வேளாண் ஏற்றுமதி மண்டலம் ரூபாய் 16 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டு வருகிறது. மாம்பழ ஏற்றுமதிக்கென ஆறு தென் மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் தேனியில் ரூ.25 கோடி மதிப்பில் ஒரு வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைக்கப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் ரூபாய் 13 கோடி மதிப்பில் ஓர் 'உணவுப் பூங்கா' அமைக்கப்படவுள்ளது. ஈரோட்டிற்கு அருகில் ஒரு மஞ்சள் வணிக வளாகம் ரூ.36.32 கோடி மதிப்பில் அமைக்கப்படும். 2003—2004 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு ரூபாய் 707.95 கோடியாக இருக்க, 2004—2005 ஆம் ஆண்டில் வேளாண்மைக்கான மொத்த திட்ட நிதி ஒதுக்கீடு ரூபாய் 882.41 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.



ஒட்டுமொத்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. வரும் வேளாண் பருவத்தில் 1.50 இலட்சம் ஏக்கர் பரப்பில் மரவகைகள் மற்றும் தீவனப் பயிர்கள் சாகுபடிக்காக புதிய நடவு மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கென 2004—2005 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 34 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

'நபார்டு' நிதியுதவியுடன், 2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 57 கோடி திட்ட ஒதுக்கீட்டில் சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் உள்ளிட்ட திறன்மிக்க நீர்ப் பயன்பாட்டு உத்திகளை இந்த அரசு செயல்படுத்தும். மேலும் மாற்றுப் பயிர்ச் சாகுபடி, சொட்டுநீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனம் அமைத்தல், சிக்கன சக்தி பம்புசெட்டுகள் வழங்குதல், துல்லிய பண்ணையம் ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்தும் பம்புசெட் உரிமையாளர்கள் பங்கேற்கும் ஒரு முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும். இதன் மூலம் பம்புசெட்டுகள் வைத்துள்ள விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும். 2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 50 கோடி நிதி ஒதுக்கத்துடன் இது செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 3—05

இந்த அரசு 2004—2005 ஆம் ஆண்டில் 45,000 பண்ணை பம்புசெட்டுகளுக்கு புதிதாக மின் இணைப்பு வழங்குவதை உறுதிசெய்யும். இதில் காவிரி டெல்டா பகுதியில் உள்ள கடைமடை மாவட்டங்களான நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பயன்பெறும் வகையில் சிறப்பு ஒதுக்கீடாக வழங்கப்படவுள்ள 15,000 இணைப்புகளும் அடங்கும். காவிரி நீரில் சட்டரீதியாக கிடைக்க வேண்டிய நமது பங்கினை கர்நாடக அரசு மறுத்து வருவதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை சமாளிப்பதற்கும், நவீன பாசனத்திற்கு ஒரு புதிய உத்வேகத்தை அளிப்பதற்கும் இத்திட்டம் வகை செய்யும்.

## கால்நடை வளர்ப்பு

ஊரகக் குடும்பங்களுக்குத் துணை வருமானத்தை உயர்த்துவதற்கு கால்நடை மேம்பாட்டுத் திட்டம் மிகவும் இன்றியமையாததாகும். கால்நடை சிறப்புப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் கடந்த இரண்டாண்டுகளில் சுமார் 9,432 கால்நடை சுகாதார முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. மாநில அளவில் கால்நடை மற்றும் எருமை இனப்பெருக்கத்தை மேம்படுத்த கடந்த இரண்டாண்டுகளில் மிக உயர்

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

அளவாக 64.62 இலட்சம் செயற்கை முறையில் கருவூட்டலை செயல்படுத்தி இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாக சாதனை படைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தொடர்புப் பணி தம்பதியினருக்கு பயிற்சி அளித்துவரும் டானிடா நிதி உதவி பெறும் கால்நடை மேம்பாட்டுத் திட்டம் ரூபாய் 1.41 கோடி ஒதுக்கீட்டுடன் தற்போதைய 17 மாவட்டங்களுடன் மேலும் 6 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. ரூபாய் 3.87 கோடி செலவில் தற்போதுள்ள துணை மையங்களை மேம்படுத்தி 75 கால்நடை மருந்தகங்களை அமைக்கும் திட்டத்தை அவையின் உறுப்பினர் வரவேற்பர். (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டுப் பண்ணை பயிர் வளர்ப்பு முறைக்கு அடுத்த நிதி ஆண்டிலும் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படும்.

## மீனள மேம்பாடும் மீனவர் சமுதாயத்தின் நலனும்

ரூபாய் 40 கோடி செலவில் கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய் பட்டினத்தில் மீன்பிடி துறைமுகம் ஒன்றை ஏற்படுத்த இவ்வரசு கருதியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பழவேற்காடு ஏரிப்பகுதியில் வசிக்கின்ற மீனவர்களின் வாழ்க்கை வளத்தை மேம்படுத்த பழவேற்காடு ஏரியில் சிப்பிகள், சிங்கொறால், நண்டுகள் ஆகியவற்றை வளர்க்கின்ற கடல்சார் மீன் வளர்ப்பை ஊக்குவிப்பதற்கான பரவலாக்கப்பட்ட திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படும். மீன் பிடிக்க இயலாத பருவ காலங்களில் கடல்சார் மீனவர்களுக்கு உதவுவதற்கான நிவாரணத் திட்டத்திற்காக ரூபாய் 29 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. 2004—2005 ஆம் ஆண்டில் மீனவர்களுக்காக 4,000 வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ரூபாய் 15.65 கோடி நிதி வரவு—செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பாசனம்

தமிழ்நாடு, தன்னுடைய நிலமேற்பரப்பு நீர் ஆதாரங்களை முழுமையாகப் பயன்படுத்திவிட்டது. சிறிய அளவில் உள்ள நிலத்தடி நீர் ஆதாரங்களும், மிக வேகமாகக் குறைந்து வருகின்றன. காவிரி ஆற்று நீரில் தமிழ்நாட்டின் நியாயமான பங்கினை விடுவிக்க மறுப்பதில் கர்நாடக அரசு காட்டிவரும் பிடிவாதமான போக்கினை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். காவிரி நீரில் நம்முடைய நியாயமான பங்கினைப் பெற தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சிகளில் நாங்கள் ஒருபோதும் தளரமாட்டோம். நீர் ஆதாரங்கள் அனைத்தையும்



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

தேசியமயமாக்கி நதிகளை இணைக்கும் திட்டத்தை செயல்படுத்துதல் ஒன்றே நடைமுறைக்கு ஏற்ற நீண்ட காலத் தீர்வாகும். மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை மற்றும் குண்டாறு ஆகிய ஆறுகளை தீபகற்ப நதி இணைப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொண்டு திட்ட தயாரிப்பை விரைவுபடுத்துமாறு நதிகள் இணைப்பிற்கான பணிக்குழுத் தலைவர் திரு. சுரேஷ் பிரபுவிடம், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். விரைவில் தீர்வு காணக்கூடிய இதர சில சிறிய இணைப்புத் திட்டங்களையும் விரைவாக முடிக்கும்படி அவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். பத்தாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் இத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என இந்த அரசு வலியுறுத்தும்.

பாசன வசதி மேலாண்மையிலும் தண்ணீரை திறம்படப் பயன்படுத்துவதிலும் உழவர்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு 1,566 பாசனநீர் பயன்படுத்துவோர் சங்கங்களுக்கான தேர்தல்கள் தற்போது முடிக்கப்பட்டுள்ளன. உழவர்களின் உரிமையினை நிலைநாட்டுவதிலும், மாநிலத்தில் உள்ள பாசன முறைகளின் செயலாக்கம் மற்றும் பராமரிப்பில் அவர்களை பங்கேற்கச் செய்வதிலும் எங்களது இடையறாத உறுதிப்பாட்டினை இது பிரதிபலிக்கிறது. நடப்பாண்டில் ரூபாய் 2,900 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய ஆற்று வடிநில அடிப்படையிலான ஒட்டுமொத்த நீர் ஆதார மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக வங்கியின் ஒப்புதல் கிடைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

பிற்பகல் 3—10

இந்த அரசு, வேலைக்கு உணவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2004—2005 இல் ரூபாய் 100 கோடி ஒதுக்கீட்டில், 100 ஏக்கர்களுக்கு மேற்பட்ட ஆயக்கட்டைக் கொண்ட குளங்களைத் தூர்வாரி மேம்படுத்துவதற்கான பெருந்திட்டம் ஒன்றை மேற்கொள்ளும். பாசனத்திற்கான மொத்த ஒதுக்கீடு திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 912.45 கோடியாக இருக்க 2004—2005—ல் ரூபாய் 967.45 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

## சுற்றுச்சூழல் மற்றும் வனங்கள்

வெளிநாட்டு நிதி நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டுவரும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நடப்பு நிதியாண்டில் நிறைவுபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். காடுவளர்ப்பில் கூட்டு நிருவாகத்தைக் கொண்ட இத்திட்டம்

பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டம் தமிழ்நாடு இயற்கை வள நிர்வாகத் திட்டம் எனும் தலைப்பில் ரூபாய் 779.33 கோடி மதிப்பீட்டில் ஐந்து ஆண்டு கால அளவில் மேற்கொள்ளப்படுவதற்காக வகுக்கப்பட்டு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கி (Japan Bank for International Co-operation) அதன் நிதியுதவிக்காக அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒப்புதலை எதிர்நோக்கி வரவு—செலவுத் திட்டத்தில் ரூபாய் 65.63 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஐந்தாண்டுகளில் ரூபாய் 21.40 கோடி மொத்த மதிப்பீட்டில் ஆற்றுப் படுகைகளில் தேக்கு மரங்களை வளர்க்கும் பெருந்திட்டம் ஒன்றிற்கு இந்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## நமது கிராமம்

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கிராமங்களின் முழுமையான வளர்ச்சியினை உறுதிசெய்யும் நோக்கத்தினைக் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டு 'நமது கிராமம்' என்று அவர்களால் பெயரிடப்பட்ட (மேசையைத் தட்டும் ஒலி) புதியதொரு திட்டத்தை அறிவிப்பதில் நான் பெருமை கொள்கிறேன். ரூபாய் 200 கோடி செலவில் இந்தத் துணிகர முயற்சி செயல்படுத்தப்படும். வரவு செலவுத் திட்டத்தில் ரூபாய் 52.21 கோடி தொடக்க நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு நபார்டு வங்கியின் நிதியுதவியைப் பெறுவோம்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கிராமமும் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைவதற்காக ஜனநாயக அதிகாரப் பகிர்வு மற்றும் பங்கேற்பு அணுகுமுறையில் அமைந்த கோட்பாடுகளுக்கு 'நமது கிராமம்' திட்டம் வடிவம் கொடுக்கிறது. இத்திட்டத்தின்கீழ், குடிநீர், துப்புரவு, வடிகால், சுகாதாரம், பெண்ணுரிமை, சத்துணவு, தூய்மை மற்றும் உடல்நலன், ஆரம்பக்கல்வி, சுற்றுச்சூழல் மேம்பாடு, நீர் ஆதாரங்களின் மேலாண்மை, கிராமச் சாலைகள், தெருவிளக்குகள் போன்ற துறைகளில் திட்டவட்டமான மேம்பாடுகளை உறுதிசெய்ய செயல்திட்டம் ஒன்றைத் தயாரிக்க கிராம சபை கூடும். தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க ஒவ்வொரு அரசுத் துறையின் அதிகாரிகளும் இந்தக் கிராம சபைக்கு உதவிபுரிவர். கிராம சபைகள் தமது திட்டத்தின் செயலாக்கத்தைக் கண்காணிக்கும் வகையில் குறிப்பிட்ட கண்காணிக்கத்தக்க குறியீடுகள் வெளியிடப்படும். உள்ளூர்ப் பள்ளிகளில்





பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்திவிடுகின்ற மாணவர் எண்ணிக்கை வீதம் குறித்தும், கிராமத் துப்புரவு, பொது சுகாதாரம் மற்றும் உடல்நலன் ஆகியவற்றிற்குக் கவனம் அளிப்பதும் இதில் அடங்கும். கிராம சபைகள் மக்களுக்கு உண்மையான நலன்களை அளித்து அவர்களது வாழ்க்கைத் தரத்தையும் வாழும் சூழலையும் மேம்படுத்த உதவும் திட்டங்களின் மீது கவனம் செலுத்தச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## அதிகார உரிமை மற்றும் வறுமை குறைப்பு

மாநிலத்திலுள்ள ஊரகப் பகுதிகளில் வறுமையை விரைந்து குறைப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கும் மற்றொரு துணிகரமான முயற்சியை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் முடிவு செய்துள்ளார்கள். இந்தப் புதிய திட்டத்தின் முதற்கட்டமாக ஒவ்வொரு கிராமத்திலும் ஏழைகளில் மிகவும் ஏழையாக உள்ள 25 குடும்பங்கள் சில குறிப்பிட்ட அளவுகோல்களின் அடிப்படையில் கிராம சபை மூலமாகக் கண்டறியப்படுவர். இப்பயனீட்டாளர்களுக்குத் தேவையான வாழ்வாதாரப் பாதுகாப்பு, சத்துணவுப் பாதுகாப்பு, வீட்டுவசதிக்கான பாதுகாப்பு, சுகாதார வசதிக்கான பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை வாழ்நாள் தேவைகளை அளிக்க முற்படுவோம். இப்பயனீட்டாளர்கள் அவர்களுடைய குடும்ப வருமானத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான புதிய மற்றும் துணைத் தொழில்களில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். பொதுவிநியோக முறையின் கீழ் பயன்பெறுதல், ஊரக வீட்டுவசதித் திட்டங்கள் மற்றும் தரமான சுகாதார வசதிகள் ஆகிய தங்களது வாழ்நாள் அடிப்படைத் தேவைகளை இப்பயனீட்டாளர்கள் மனநிறைவளிக்கும் வகையில் பெறக்கூடிய உரிமையைப் பெற்றுத்தரும். சமூகநலன் என்பதன்கீழ் ரூபாய் 6.50 கோடி தொடக்க ஒதுக்கீட்டுடனும், ஊரக வளர்ச்சி என்பதன்கீழ் ரூபாய் 5 கோடி ஒதுக்கீட்டுடனும் ஆகமொத்தம் ரூபாய் 11.50 கோடி ஒதுக்கீட்டுடன் இந்தப் புரட்சிகரமான அதிகார உரிமைத் திட்டம் 2004—2005—ல் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம், 2004—2005—ல் உலக வங்கி நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள தமிழ்நாடு அதிகார உரிமை மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டத்துடன் மேலும் விரிவுபடுத்தப்படும். ஆறாண்டுகளில் ரூபாய் 650 கோடி திட்ட மதிப்பீட்டில் இது செயல்படுத்தப்படும்.

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

பிற்பகல் 3—15

### ஒட்டுமொத்த ஊரகக் கட்டமைப்பு மேம்பாடு

ஊரகப் பகுதிகளில் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றம் காணச் செய்வதோடு மட்டுமல்லாது தேவையான அளவு ஊரக வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமைந்த ஒட்டுமொத்த ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டமொன்றை அரசு தொடங்கியுள்ளது. ஊரகப்பகுதி வாழ்மக்களுக்கு, ஊரகக் குடியிருப்பு, முழுமையான ஊரகத் தொடர்பு, குடிநீர் பாதுகாப்பு, முழுமையான துப்புரவு மற்றும் தடையில்லா மின்வழங்கல் ஆகியவற்றைப் பெறச்செய்வதற்கு இத்திட்டம் முன்னெப்போதும் இருந்திராத முக்கியத்துவத்தை அளிக்கும். திருத்த மதிப்பீட்டு ஒதுக்கீடு ரூபாய் 1898.76 கோடி என்றிருக்க, 2004—2005 ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சிக்கான மொத்த நிதியொதுக்கீடு ரூபாய் 1952.61 கோடிக்கு உயர்த்தப்படுகிறது.

### ஏழை–எளியோருக்கான வீட்டுவசதி

ஏழை—எளியோருக்கு வீட்டு வசதிகள் செய்து கொடுப்பதற்கு இந்த அரசு, தொடர்ந்து உரிய கவனம் எடுத்துக் கொள்ளும். 2001 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து ரூபாய் 379.11 கோடி செலவில் 1.04 இலட்சம் புதிய வீடுகள் கட்டப்பட்டுள்ளன. ரூபாய் 52.05 கோடி செலவில் மேலும் 50,678 கச்சா வீடுகள் நிலை உயர்த்தப்பட்டன. 2004—2005 ஆம் ஆண்டில் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் ஊரகக் குடும்பங்களுக்கு புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் கச்சா வீடுகளை நிலையுயர்த்துவதற்கான பல்வேறு திட்டங்களுக்கு ரூபாய் 79.66 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. 2004—2005 ஆம் ஆண்டில் மொத்தம் 36,426 புதிய வீடுகள் கட்டப்படும் மேலும் 18,691 கச்சா வீடுகள் நிலையுயர்த்தப்படும். ஊரக வீட்டுவசதியில் விரைந்த முன்னேற்றம் காண வர்த்தக வங்கிகளின் நிதிப்பங்கேற்பு கொண்ட ஊரக வீட்டுவசதிக்கான புதியதொரு திட்டத்தை நாங்கள் வடிவமைப்போம்.

### ஊரகச் சாலைகளின் மேம்பாடு

ஊரகச் சாலைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு இந்த அரசு முன்னெப்போதும் இருந்திராத முக்கியத்துவம் அளித்து வருகிறது. மாநிலத்திலுள்ள ஊரகச் சாலைகளை மேம்படுத்துவதற்கான பெருந்திட்டம் ஒன்றினை இந்த அரசு தொடங்கியுள்ளது. இதில் பின்வரும் முக்கிய கூறுகள் அடங்கியுள்ளன:



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

- நெடுஞ்சாலைத் துறை மொத்தம் 41,125 கி.மீ நீளமுள்ள ஏனைய மாவட்டச் சாலைகளைப் பராமரிக்கிறது. இதில் 4273 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 2003—2004 ஆம் ஆண்டில் தரம் உயர்த்தப்பட்டன. 6492 கி.மீ. நீளமுள்ள ஏனைய மாவட்டச் சாலைகளை, குறிப்பாகப் பேருந்துகள் ஓடும் சாலைகளைச் சீரமைப்பதற்காக மொத்தம் ரூபாய் 336.05 கோடி செலவிலான சிறப்புத் திட்டம் ஒன்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப்பணிகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை ஏப்ரல் 2004—க்கு முன்னரே மாண்புமிகு உறுப்பினர்கள் கண்கூடாகக் காணலாம்.
- ரூபாய் 15 கோடி செலவில் இதர மாவட்டச் சாலைகளில் 150 சிறுபாலங்களைக் கட்டும் பணி துவங்கப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)
- இதுவரையிலும் எந்த அமைப்பினாலும் பராமரிக்கப்படாத 5850 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளைத் தரமுயர்த்துவதன் மூலமும், சீரமைப்பதன் மூலமும் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக மற்றொரு பெருந்திட்டம் ரூபாய் 300 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நெடுஞ்சாலைத் துறையினால் முன்னர் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆனால் அதற்குப்பின் பராமரிப்பின்றி இருக்கும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கும், பேருந்துகள் ஓடும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கும், முன்னர் தார் போடப்பட்டு தற்போது சிதிலமடைந்துள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளுக்கும் இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)
- பிரதமரின் கிராமப்புற சாலைத் திட்டத்தின் கீழ் ரூபாய் 164 கோடி செலவில் 1216.57 கி.மீ. நீளமுள்ள கிராமப்புறச் சாலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறாக ஊரகப்பகுதிகளில் அனைத்துப் பருவநிலைகளுக்கும் ஏற்ற தரமான சாலைகளை அளிக்கும் ஒட்டுமொத்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பிற்பகல் 3—20

### ஊரகப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு

இந்த அரசு 2001—2004 காலகட்டத்தில் 13,365 ஊரகக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளித்துள்ளது. மொத்தம் 14,449 கைப்பம்புகள் சிறுவிசைப் பம்புகளாக மாற்றப்பட்டுள்ளன. இக்கால அளவில் ஊரகப் பகுதிகளிலுள்ள 14,550 அரசுப் பள்ளிகளுக்கும், 1226 தொடக்கச் சுகாதார நிலையங்களுக்கும் குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது. குடிநீர் வழங்குவதற்கான துறை சீர்திருத்தத் திட்டம், 6 மாவட்டங்களில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 223.16 கோடி செலவில், சுமார் 9900 குடிநீர் வழங்கல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் 8877 திட்டங்கள் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டன.

2004—2005 ஆம் ஆண்டில், ரூபாய் 600 கோடி மொத்த மதிப்பீட்டுச் செலவில் 6500 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்குவதை உறுதி செய்வதற்கானத் திட்டங்களை இந்த அரசு மேற்கொள்ளும். ரூபாய் 327.32 கோடி மதிப்பீட்டில் 28 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில், முழுமையான துப்புரவுத் திட்டத்தை இவ்வரசு செயல்படுத்தும். மொத்தம் ரூபாய் 3500 கோடி செலவில், ஒட்டுமொத்த ஊரகக் குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவுத் திட்டமொன்றை ஆறு ஆண்டு காலத்தில் செயல்படுத்த உலக வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இத்திட்டத்தை 2004—2005 ஆம் ஆண்டில் செயல்படுத்தக் கருதியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி)

### ஊரக வேலை வாய்ப்பு

1992—ல் மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கிய சுய உதவிக் குழு இயக்கம், ஊரகப்பகுதிகளுக்கு அதிகார உரிமையும் சுய வேலைவாய்ப்புகளும் அளிக்கின்ற மாபெரும் திட்டமாக உருவெடுத்துள்ளது. சுமார் ரூபாய் 393.64 கோடி மதிப்பீட்டுச் சேமிப்புடன் சுமார் 25 இலட்சம் பயனீட்டாளர்களைக் கொண்ட மொத்தம் 1.52 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த சுய உதவிக் குழுக்களுக்கு அளிக்கப்பட்ட கடன் வசதி ரூபாய் 564 கோடியை விஞ்சியுள்ளது. சம்பூர்ண கிராமத் திட்டம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதிக்



கழகத்தின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் 'நபார்டு' வங்கியுதவியுடனான திட்டங்கள் ஆகியவற்றின்கீழ் கடன் வசதிகளை அளிக்கும் திட்டங்களுக்கு 2004—2005 ஆம் ஆண்டில் முக்கிய கவனம் செலுத்துவோம்.

மத்திய அரசின் நிதியுதவியுடன் சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஊரகப் பகுதிகளில் ஊதியத்திற்கு வேலை, உணவுப் பாதுகாப்பு, நிலையான சொத்துக்களை ஏற்படுத்துதல் ஆகிய பயன்களை இந்த அரசு அளித்துவருகிறது. 2003—2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் சுமார் 10.75 கோடி மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்காக 7.08 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி பயன்படுத்தப்பட்டுள்ளது. 2003—2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ஊதியம் மற்றும் இடு பொருட்கள் ஆகியவைகளுக்கு இந்த அரசு ரூபாய் 392.13 கோடி ஒதுக்கீட்டுள்ளது. நீர்நிலைகளைப் பராமரிப்பதில் கவனம் செலுத்தும் வகையில், இத்திட்டம் 2004—2005 ஆம் ஆண்டில் மேலும் விரிவாக்கப்படும்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் இந்த அரசு மேற்கொண்ட புரட்சிகரமான மற்றொரு முயற்சியாகும். இத்திட்டம் ஊரக பண்ணைசாராத் துறைக்கு புதியதொரு உத்வேகத்தை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 369 வளர்ச்சி வட்டாரங்களை உள்ளடக்கிய மொத்தம் 695 திட்டங்களைச் செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 73 தொழில் பிரிவுகள் ஏற்கெனவே உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. இத்திட்டத்திற்கான ஒதுக்கீடு 2004—2005—ல் ரூபாய் 20 கோடிக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

### ஊரக மின் வசதி

நடப்பாண்டில் ரூபாய் 150 கோடி ஒதுக்கீட்டுடன் ஊரக மின் வழங்கலின் தரத்தை மேம்படுத்தும் திட்டங்களை தமிழ்நாடு மின்சார வாரியம் செயல்படுத்தி வருகிறது. இந்த ஒதுக்கீடு 2004—2005—ல் ரூபாய் 192.58 கோடியாக உயர்த்தப்படும். ஊரகப் பகுதிகளில் மின் வழங்கல் தரத்தை மேம்படுத்த தமிழ்நாடு மின்சார வாரியம், 12 புதிய துணை மின் நிலையங்களை ஏற்படுத்துவதுடன், 22 மின் நிலையங்களில் உள்ள மின்மாற்றிகளின் திறனை உயர்த்தி 2172 புதிய மின்மாற்றிகளையும் நிறுவும்.

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 82 இலட்சம் ஒதுக்கப்படுகிறது. இத்திட்டம் ரூபாய் 192.70 கோடி ஆண்டு ஒதுக்கீட்டுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டு வரும் பணிகள் முடிவடையும் தருவாயில் 2004—2005 ஆம் ஆண்டிலிருந்து நிதி ஒதுக்கம் மற்றும் பயன்பாட்டிற்கான பின்வரும் திருத்திய முறை பின்பற்றப்படும்:

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| • குடிநீர் வழங்கல் பணிகள் | 15.00 |
| • நமது கிராமம் திட்டம் | 15.00 |
| • பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான மாணவரில்லங்கள் | 5.00 |
| • ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவரில்லங்கள் | 5.00 |
| • சிமெண்ட் சாலைகள் உட்பட கிராம ஊராட்சி சாலைகள் மற்றும் தெரு விளக்குகள் | 10.00 |
| • குறிப்பான பணிகளுக்கு இல்லாத ஏனைய ஒதுக்கீடு | 32.00 |
| மொத்தம் | 82.00 |

திருத்திய ஒதுக்கீட்டு முறை குறித்த விரிவான வழிகாட்டி நெறிமுறைகள் தனியே வெளியிடப்படும்.

பிற்பகல் 3—25

**வளர்ச்சித் துடிப்பு கொண்ட இரண்டாம் நிலைத் துறையை நோக்கி**

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாட்டிற்கான 2003 ஆம் ஆண்டு புதிய தொழிற் கொள்கையினை அறிவித்துள்ளார்கள். இந்தக் கொள்கை, உற்பத்தித் துறையினை முன்னிறுத்தி, மாநிலத்தின் முதலீட்டுச் சூழ்நிலையினை மேம்படுத்துவதற்கான செயல்திட்டத்தை வகுத்துள்ளது. மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய சீரமைப்புப் பணிகளாவன:

- தரமான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
- தரமான எரிசக்தி வழங்குதல்.





- நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல்.
- மாநில வரி விதிப்பு முறையில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளுதல்.
- தொழிலாளர் துறைச் சீர்திருத்தங்கள்.
- தொழில்நுட்பரீதியில் நவீனமயமாக்குதல் மற்றும் நிலை உயர்த்துதல்.

**கட்டமைப்பு மேம்பாடு**

கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கு மூலதன முதலீட்டினை அதிகரிக்கும் வகையில் பொது நிதியைச் சீரமைக்க வேண்டியுள்ளது. பொதுத் துறையும் தனியார் துறையும் இணைந்து பங்கேற்பதையும் ஊக்குவிக்க வேண்டும். வருவாய்க் கணக்கில் வரவு—செலவுத் திட்டத்தில் ஏற்படும் அதிக அளவு பற்றாக்குறையின் காரணமாக சாலைகள், நகர்ப்புறக் கட்டமைப்பு, குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றல், வடிகால் வசதி போன்ற பணிகளுக்குப் போதுமான மூலதனச் செலவுகளை மேற்கொள்ள இயலவில்லை. இச்சூழ்நிலையை நிதிச் சீர்திருத்தங்கள் மூலம் சரிசெய்திட உறுதியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு பெருமளவில் முதலீடு செய்வது உறுதி செய்யப்படும். கட்டமைப்பு வசதி மேம்பாட்டில் பொதுத்துறை மற்றும் தனியார் பங்கேற்புக் கொள்கை ஒன்றினை உருவாக்கிட, பன்னாட்டு வல்லுநர்களின் கருத்துகள் உள்ளிட்ட விரிவான கலந்தாலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**நெடுஞ்சாலைகள் மேம்பாடு**

நெடுஞ்சாலைகள் மேம்பாடு தற்போது திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மத்திய அரசு தமிழ்நாட்டிலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளை மேம்படுத்தி வருகிறது. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் தொடங்கிவைத்த சிறப்புத் திட்டத்தின் கீழ் சென்னை மாநகர் உள்ளிட்ட நான்கு பெருநகரங்களை இணைக்கும் தங்க நாற்கரத் திட்டம் மிக விரைவான முன்னேற்றம் கண்டு வருகிறது. தமிழ்நாட்டில் 341 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் மாண்புமிகு பாரதப்

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களும், கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையிலான இந்தியாவின் வடக்கு—தெற்கு இணைப்பில் பணிகளைத் தொடங்கி வைத்தனர். இத்திட்டத்தின் கீழ் 851 கிலோ மீட்டர் நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் தமிழ்நாட்டில் மேம்படுத்தப்பட்டு வருகின்றன. இதுதவிர, இம்மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் 507 கிலோ மீட்டர் தூர தேசிய நெடுஞ்சாலைகளும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டம் ரூபாய் 2160 கோடி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்பட்டுள்ளது. ஆற்காட்டிற்கும் திருவாரூருக்குமிடையே 393 கிலோ மீட்டர் நீளத்திற்கும், நாகப்பட்டினத்திற்கும் தூத்துக்குடிக்குமிடையே 330 கிலோ மீட்டர் நீளத்திற்கும், மாநில நெடுஞ்சாலைகளை அமைப்பதற்கு இத்திட்டம் உதவும். சுமார் 2000 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளும், மாவட்டப் பெருஞ்சாலைகளும் தரமுயர்த்தப்படும். தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டத்திற்காக 2004—2005 ஆம் ஆண்டில், ரூபாய் 500 கோடி ஒதுக்கப்படுகிறது.

தற்போதுள்ள கட்டமைப்பு வசதிகளை உரியவாறு பராமரிப்பதும் சம முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1990 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் இது புறக்கணிக்கப்பட்டது. திருத்த மதிப்பீட்டில் சாலைகளைப் பராமரிப்பதற்கான நிதியொதுக்கம் 2003—2004 ஆண்டிற்கு வரவு—செலவு திட்ட ஒதுக்கீடான ரூபாய் 248.56 கோடியிலிருந்து ரூபாய் 314 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. அதைப்போலவே, 2004—2005 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் சாலைகளைப் பராமரிப்பதற்கான ஒதுக்கீடு ரூபாய் 413 கோடியாக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. சாலைகளை உரியவாறு பராமரிப்பதை உறுதிசெய்ய, அரசு மேற்கொண்டு வருகின்ற இந்தத் திட்டவட்டமான நடவடிக்கைகளை அவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் வரவேற்பர். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் மொத்தம் 14,576 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகளும் மாவட்டப் பெரும் சாலைகளும் உள்ளன. இதில் கிட்டத்தட்ட 723 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் தமிழ்நாடு சாலைத் துறைத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படுகின்றன. எஞ்சியுள்ள மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் மாவட்டப் பெரும் சாலைகளைத் தரம் உயர்த்துவதற்கான புதிய திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு ஆசிய வளர்ச்சி வங்கி/உலக வங்கியின் நிதி உதவி பெற அனுப்பிவைக்கப்படும். பொதுத்



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

துறையும் தனியாரும் பங்கேற்கும் அமைப்பில், மாநில நெடுஞ்சாலைகளிலும், மாவட்டப் பெரும் சாலைகளிலுமுள்ள பெரும் போக்குவரத்து நெரிசலைக் கொண்ட சாலைப் பகுதிகளை மேம்படுத்துவதற்கான புதிய திட்டம் ஒன்றினை மேற்கொள்வோம். இப்புதிய திட்டங்கள் உருவாக்கப்படும் வரையில், மொத்தம் ரூபாய் 221.32 கோடி செலவில் 2149 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள், மாவட்டப் பெரும் சாலைகள், சர்க்கரை ஆலைச் சாலைகள் ஆகியவற்றைப் புதுப்பித்தல் மற்றும் நிலையுயர்த்துதலுக்கான சிறப்புத் திட்டம் ஒன்றினை இந்த அரசு துவக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3—30

## குடிநீர் வழங்கலும் துப்புரவும்

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் பின்வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்களைத் தொடங்கியுள்ளது:

- ரூபாய் 69.20 கோடி செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 674 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ரூபாய் 133.05 கோடி செலவில் நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் திருவாரூர், திருத்துறைப்பூண்டி நகராட்சிகள், 3 பேரூராட்சிகள் மற்றும் 642 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ரூபாய் 74 கோடி செலவில் மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் உசிலம்பட்டி நகராட்சி, 4 பேரூராட்சிகள் மற்றும் 406 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- ரூபாய் 85.04 கோடி செலவில் திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் திண்டுக்கல் நகராட்சி, 7 பேரூராட்சிகள் மற்றும் 816 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- சுமார் ரூபாய் 78.70 கோடி செலவில் திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் சங்கரன்கோவில், சிவகாசி நகராட்சிகள், 2 பேரூராட்சிகள் மற்றும் 401 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

• ரூபாய் 98.85 கோடி செலவில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகப்பட்டினம் நகராட்சி, 2 பேரூராட்சிகள் மற்றும் 890 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

• ரூ.126.85 கோடி செலவில் நாமக்கல் மாவட்டத்தில் 6 பேரூராட்சிகள் மற்றும் 1399 ஊரகக் குடியிருப்புகள் பயனடையும் வகையிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 200 கோடி முதலீட்டில் 8 நகராட்சிகள் மற்றும் 42 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கலை மேம்படுத்த 50 குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வோம். இச்செயல்பாடுகள் ஏறக்குறைய 14 இலட்சம் மக்களுக்குப் பாதுகாப்பான குடிநீர் வழங்குவதற்குப் பெரிதும் உதவும். (மேசையைத் தட்டும் ஒலி) அவினாசி—அத்திக்கடவு குடிநீர்த் திட்டத்தை மேற்கொள்ள தக்க நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது. 3 மாநகராட்சிகள் மற்றும் 4 நகராட்சிகளில் ரூபாய் 575.30 கோடி செலவில் ஒட்டு மொத்த கழிவுநீரகற்று திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ரூபாய் 844 கோடி செலவில் எஞ்சிய அனைத்து மாவட்டத் தலைமையிடங்களும் கழிவுநீரகற்று வசதியைப் பெறும் வண்ணம் பெருந்திட்டமொன்றை மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

### மின் துறை

மின் துறையில் புதிய மின் சக்தித் திறனை உருவாக்கி மின் வழங்கல் திறனை மேம்படுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர், இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்துள்ள தனிக்கவனம் மின்தடையின்றித் தரமான மின் சக்தி கிடைப்பதை உறுதி செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பயன்பாட்டு அடிப்படையிலான மின் கட்டண முறைக்கு மாறியதன் மூலம், தமிழ்நாடு மின்சார வாரியம் வழங்கும் மின்சக்தியின் தரத்தை மேம்படுத்துவதை உறுதி செய்துள்ளது. இதன் பயனாக வழங்கப்படும் மின்சாரத்தின் அலை அதிர்வு எண் 48 ஹெர்ட்ஸ் என்பதிலிருந்து விதிக்கப்பட்ட 50 ஹெர்ட்ஸ் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

மாநிலத்தின் மின்சார உற்பத்தித் திறனை வலுப்படுத்துவதை உறுதி செய்ய, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பல புதிய முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்கள். வட சென்னையில் 1000 மெகாவாட் மின்உற்பத்தி நிலையம் ஒன்றை நிறுவ தேசிய அனல் மின் கழகத்திற்கும், தமிழ்நாடு மின்வாரியத்திற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில்



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

கையொப்பம் இடப்பட்டுள்ளது. அதேபோல தமிழ்நாடு மின்வாரியத்திற்கும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி கழகத்திற்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தூத்துக்குடியில் 1000 மெகாவாட் அனல் மின் உற்பத்தி நிலையத்தை நிறுவுவதில் முன்னேற்றம் காணப்பட்டு வருகிறது. கூடங் குளத்தில் 2000 மெகாவாட் திறனுடைய அணுமின் உற்பத்தி நிலைய நிர்மாணப் பணி மிக வேகமாக நடந்தேறி வருகிறது. கல்பாக்கத்தில் 500 மெகாவாட் உற்பத்தித் திறன்கொண்ட அதிக அணு பெருக்கி கலன் (prototype fast breeder reactor) ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. மின் வழங்கலில் மேம்பட்ட தரத்தினையும் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதற்காக மின்னனுப்புகை மற்றும் பகிர்மானத் திட்டங்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் 2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 1305.46 கோடி அளவிற்கு முதலீடு செய்யும்.

மத்திய அரசு, 2003 ஆம் ஆண்டு மின் சட்டத்தைப் பிறப்பித்துள்ளது. எதிர்காலத்திற்கான செயல்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். இதில் எவ்வாறு செயல்படுவது என்பது குறித்த கலந்தாலோசனைகளையும், விவாதங்களையும் மேற்கொள்வோம். மின் உற்பத்தியில் தனியார் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்கான கொள்கை வடிவம் ஒன்று உருவாக்கப்படும்.

பிற்பகல் 3—35

### துறைமுகங்கள்

உருவாக்கி, சொந்தமாக்கிக் கொண்டு இயக்க வருவாய்ப் பங்கு அளித்துப் பின்னர் அரசுக்கு உரிமை மாற்றும் (Build Own Operate Share and Transfer) அடிப்படையில், ரூபாய் 250 கோடி திட்ட மதிப்பீட்டில், கடலூர் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றினை மேற்கொள்ள இந்த அரசு திட்டமிட்டுள்ளது. எண்ணெய்ப் போக்குவரத்திற்கு உதவிடும் வகையில், ரூபாய் 56 கோடி செலவில் நாகப்பட்டினம் துறைமுகத்தில் சரக்குகளைக் கையாளத் தளம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் 5 இலட்சம் மெட்ரிக் டன் எண்ணெய் வர்த்தகம் மேற்கொள்ள முடிகிறது. குளச்சல் துறைமுகத்தில் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள அதன் திட்டக் கோட்பாடுகளை விரிவாக ஆராய்ந்து வருகிறோம். 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2 ஆம் நாள் அன்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சேதுசமுத்திரம் திட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டும் என்று

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

மாண்புமிகு பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மாண்புமிகு பிரதமர் அவர்கள் இத்திட்டத்தை "சாகர் மாலா" (Sagar Mala) திட்டத்தின் ஒரு பகுதியாக செயல்படுத்துவதற்கு ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்பதனை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**விதிகளில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி எளிமைப்படுத்துதல்**

ரூபாய் 25 கோடிக்கு மேலான முதலீடு கொண்ட தொழில்களுக்கு ஒப்புதல் பெறுவதற்கான எளிய நடைமுறை ஒன்றினை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நடைமுறையின் கீழ், 10 வெவ்வேறு படிவங்களை ஒருங்கிணைத்து பொதுவான விண்ணப்ப படிவம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய முதலீடுகளுக்கான விண்ணப்பங்கள் ஒற்றைச் சாளர முறையில் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் (GUIDANCE BUREAU) மூலம் பரிசீலிக்கப்படுகின்றன. முதலீட்டாளர் தொழில் துவங்க அனுமதியைப் பெறுவதற்கு, அலுவலகங்களை நாடிச் செல்லவேண்டியதில்லை. பல்வேறு துறைகள் ஒரே நேரத்தில் இணையாக விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதால் (Parallel Processing) பரிசீலனை நேரம் குறைக்கப்படுகிறது. இதுபோன்ற ஒற்றைச் சாளர முறை ஒரு முன்னோடித் திட்டமாக இரண்டு மாவட்டங்களில் சிறு தொழில் முதலீட்டாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இது படிப்படியாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் பின்னர் விரிவுபடுத்தப்படும்.

தமிழ்நாட்டில் தற்போது தொழில் முனைவர்கள் மொத்தம் 53 பல்வகைப் பதிவேடுகள் மற்றும் படிவங்களைத் தாக்கல் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இது, பெருமளவில் மேலாண்மை நேரம் மற்றும் உழைப்பினை வீணாக்கும் பெருந்தொல்லையாக உள்ளது. இந்தப் பதிவேடுகளையும் படிவங்களையும் ஒருங்கிணைத்து சீராக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றின் எண்ணிக்கை அத்தியாவசியத் தேவையின் அடிப்படையில் வெகுவாகக் குறைக்கப்படும். கையாளுவதற்கு எளிதான முறையில் இவை எளிமையாக்கப்படும்.

**வரிச் சீரமைப்புகள்**

பிரபல பொருளாதார வல்லுநர் டாக்டர் ராஜா யி. செல்லையா அவர்களின் தலைமையின்கீழ் வரிச் சீரமைப்பு மற்றும் வருவாய் அதிகரிப்பு ஆணையத்தை இவ்வரசு அமைத்தது. 2003—2004 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தில் ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் தீர்வை மற்றும் மின்நுகர்வுக்கான புதிய சட்டம் இயற்றப்பட்டது. எந்த வகையான



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

மின்நுகர்வோருக்கும் வரி விலக்களிக்கக்கூடாது என ஆணையம் பரிந்துரை செய்தபோதிலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு சிறிய மின்நுகர்வோரின் நலனைக் காக்கும் பொருட்டு விவசாய பம்பு செட்டுகளுக்கும், குடிசை மின் இணைப்புகள் மற்றும் வீட்டு மின் இணைப்புகளுக்கும் விலக்களித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் சொத்துரிமை மாற்றத்திற்கான முத்திரைத்தாள் தீர்வையையும், உடைமையுரிமை மாற்றத் தீர்வையையும் குறைக்கும் துணிவான முடிவினை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் எடுத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறாக, முத்திரைத்தாள் தீர்வை மற்றும் உரிமை மாற்றத் தீர்வை ஊரகப் பகுதிகளில் 12 சதவீதத்திலிருந்து, 8 சதவீதமாகவும், நகர்ப்பகுதிகளில் 13—லிருந்து 8 சதவீதமாகவும் 21.11.2003 முதல் குறைக்கப்பட்டன. பத்திரப் பதிவு நடைமுறையில் ஒளிவு மறைவற்ற தன்மையினை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்தக் கட்டண வீதங்கள் குறைக்கப்பட்டு எளிமையாக்கப்பட்டுள்ளன. கட்டண வீதங்கள் கணிசமான அளவு குறைக்கப்பட்ட போதிலும், இந்த கட்டணக் குறைப்பு செயல்படுத்தப்பட்டதிலிருந்து அரசின் வருவாய் அதிகரித்துள்ளது.

விற்பனை வரிக் கட்டமைப்பில் சில திருத்தங்களும் சீரமைப்பும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நாம் அறிவோம். வரிச் சீர்திருத்த மற்றும் வருவாய் பெருக்கக் குழு மதிப்புக் கூட்டு வரியை உள்ளிட்ட சில பரிந்துரைகளைச் செய்துள்ளது. இதற்கான தொடக்க நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். தேசிய அளவில் ஒருமித்த கருத்து உருவாகும் அதே நேரத்தில், தயார் நிலைக்குத் தேவையான தொடக்க நடவடிக்கைகளை மேற்கொள்வோம். வருமாண்டுகளில் இத்திட்டத்தின் செயலாக்கம் பற்றிய தேசிய அளவிலான விவாதங்களின் அடிப்படையில் இறுதியான முடிவு இதற்காக எடுக்கப்படும். தமிழ்நாட்டில் வரி விதிப்பினை எளிமையாக்குவதும், ஒளிவு மறைவற்றதாக ஆக்குவதுமே நமது நோக்கமாகும்.

பிற்பகல் 3—40

**தொழிலாளர் துறைச் சீர்திருத்தங்கள்**

இரண்டாவது தேசியத் தொழிலாளர் ஆணையத்தின் அறிக்கையின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்குப் பொருத்தமான தொழிலாளர் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் விதிகளை ஆய்வு செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தக்க ஆலோசனைக்குப் பின்,

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

தொழிலாளர் துறைச் சீர்த்திருத்தங்கள் குறித்த செயல் திட்டம் வகுக்கப்படும். தொழிலாளர்களின் நியாயமான நலனைப் பாதுகாக்கும் அதே சமயத்தில் மாநிலத்தில் வேலைவாய்ப்பினைப் பெருக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

**தொழில்நுட்பத்தை நவீனப்படுத்துதலும் தரம் உயர்த்துதலும்**

தமிழ்நாடு உற்பத்தியில் இந்தியாவின் முக்கிய நடவடிக்கை மையமாக உருவெடுத்துள்ளது. உற்பத்தித் துறையில் உறுதியளிக்கப்பட்ட முதலீடுகளின் அளவு தமிழ்நாட்டில்தான் மிக அதிகமாகும். இத்துறையில் மாநிலத்தின் தன்னிகரற்ற நிலையை இது தெளிவாக்குகிறது. இத்தகைய ஒப்பீட்டு ஆதாயத்தை வலுப்படுத்த வேண்டியதன் தேவையை இது நன்கு உணர்த்துகிறது. உலகச் சந்தையில் போட்டியிடும் அளவிற்குத் தனியார் உற்பத்திப் பிரிவுகள் திறமையுடன் செயல்பட வேண்டியது அவசியமாகும். இவற்றை அடைய தொழில்நுட்பத்தின் தரத்தை உயர்த்துதலும், நவீனப்படுத்துதலும் இன்றியமையாதவையாகும். 2003 ஆம் ஆண்டு புதிய தொழிற் கொள்கையில் கோடிட்டுக் காட்டியுள்ளவாறு, தொழில் பேரவைகளுடன் கலந்தாலோசித்து தொழில்நுட்பத்தைத் தரம் உயர்த்தி நவீனமயமாக்குவதற்குத் தக்க உதவிகளைப் பரிந்துரைக்க புதிய பணிக் குழுக்கள் அமைக்கப்படும்.

**சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறை மேம்பாடு**

தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில் பிரிவுகளுக்கு அரசு கொள்முதலில், முன்னுரிமை அளிப்பதற்கான கொள்கை, பல தொழில் பிரிவுகள் புத்துயிர் பெற உதவியுள்ளது. சிறு தொழில் பிரிவுகளுக்கென புதிய கொள்கை ஒன்று வகுக்கப்பட்டு விரைவில் அறிவிக்கப்படும். 2004—2005 ஆம் ஆண்டில் இந்தியத் தொழில் கூட்டமைப்பின் (Confederation of Indian Industry) ஒத்துழைப்புடன், சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு மையம் ஒன்று தொடங்கப்படும். பொதுத் துறை மற்றும் தனியார் துறை பங்கேற்பு முறையில் இந்த மையத்தை ஏற்படுத்துவதற்காக 2004—2005 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் ரூபாய் 75 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மாநில அளவில் தனியார் தொழில் முனைவோர் முதலீட்டிற்கு ஊக்குவிப்பதுடன், மக்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும்.

தொழிற்சாலைகள் பெருவாரியாக அமைந்துள்ள பகுதிகளுக்குப் பயனளிக்கும் வகையில், தொழிற்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டதை அறிய மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்வர்.



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

(மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் இன்றியமையாத கட்டமைப்பு வசதிகளையும் சந்தைத் தொடர்பு வசதியையும் அளிக்கும். தமிழ்நாட்டில் ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைத் தொகுப்பு, மோட்டார் பம்பு மற்றும் வார்ப்படத் தொழில் தொகுப்பு, தோல் தொழில் தொகுப்பு, மோட்டார் வாகனத் தொழில் தொகுப்பு, மாம்பழக் கூழ் தொகுப்பு, கயிறு தயாரிப்பு மற்றும் உணவு தானியத் தொகுப்புகள் ஆகியவை இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும். 'ஐ.எஸ்.ஓ.' (I.S.O.) சான்றிதழைப் பெறுவதற்கும் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்கும் சிறு தொழில் பிரிவுகளுக்குத் தக்க உதவியளிக்கும் திட்டம் நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது. சிறு தொழில்களுக்கான தொழில்நுட்பத்தைத் தரம் உயர்த்துதல் மற்றும் நவீனப்படுத்த உதவும் வகையிலான திட்டத்தை ஏற்கெனவே தொடங்கியுள்ளோம். இத்திட்டம் 2004—2005 ஆம் ஆண்டிலும் தொடரப்படும்.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்**

சென்னைப் பெருநகர்ப் பகுதியில் அனைத்து வகையிலும் அதன் சிறப்பினை மீண்டும் நிலைநாட்டுவதே மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் நோக்கமாகும். மெரினா கடற்கரையினை அழகுபடுத்தியது பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையில் தரமான கட்டமைப்பு வசதிகளையும், சுகாதாரமான வாழ்க்கைச் சூழலையும் ஏற்படுத்துவதே இந்த அரசின் உயர் முன்னுரிமையாகும். தற்போது நடைபெற்றுவரும் கழிவுநீரகற்றுத் திட்டங்கள் முடிவடைந்த பின்னர், எஞ்சியுள்ள சாலைகள் புதுப்பிக்கப்பட்டு, படிப்படியாக தரமான சாலைகளாக மாற்றப்படும். சென்னை மாநகருக்கான ஒட்டுமொத்தப் போக்குவரத்து மேலாண்மைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. அதேவேளையில், போக்குவரத்திற்கான கால அளவைக் குறைக்கும் வகையில் சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டிற்கான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த முயற்சிகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் ஓர் அம்சமாகும். இத்திட்டம் 10 ஆண்டு கால அளவில் ரூபாய் 18,000 கோடி முதலீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு 2003—2004 ஆம் ஆண்டிற்கான முதலீடுகள் அதற்காக இலக்கிடப்பட்ட ஒதுக்கீடான ரூபாய் 1780.95 கோடியை விடக் கூடுதலாக இருக்கும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மின் வழங்கல் மற்றும் பகிர்மானம், சாலைப் போக்குவரத்து, வடிகால்

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

வசதிகள், குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுதல், வீட்டு வசதி, குடிசைவாழ் மக்களை வேறு இடங்களில் குடியமர்த்துதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை போன்ற துறைகளில் 2004—2005 ஆம் ஆண்டிற்கான முதலீட்டினை உயரளவாக ரூபாய் 2010 கோடி என இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

*பிற்பகல் 3—45*

## நெசவாளர்கள் நலன்

நெசவாளர்களின் நலன் அரசின் உயர் கவனத்தைப் பெற்றுள்ளது. கைத்தறி நெசவாளர்களிடமிருந்து கொள்முதல் செய்வதை உறுதி செய்யும் வகையில் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம், திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இதைப் போன்றே, முதியோர் ஓய்வூதியம் பெறுவோருக்கு வழங்கப்பட்டு வரும் இலவச சேலைகளும், இலவச வேட்டிகளும் கைத்தறி நெசவாளர்களிடமிருந்தே வாங்கப்பட்டு வருகின்றன. இதனால் மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. உயர்தரம் வாய்ந்த பாலிகாட் சேலைகள், வேட்டிகளை 1.11 கோடி பெண்கள் மற்றும் 1.11 கோடி ஆண்களுக்கு இலவசமாக வழங்கும் திட்டம் பெருவாரியான வரவேற்பினைப் பெற்றுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பை அளிப்பதோடல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள 2.22 கோடி மக்களுக்கு ஆடைப் பாதுகாப்பு வசதியையும் அளிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தை, 2004—2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக, வரவு—செலவுத் திட்டத்தில் ரூபாய் 173 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சென்னிமலைப் பகுதியில் 1010 நெசவாளர்கள் பயனடையும் வகையில், ரூபாய் 6.87 கோடி செலவில், தறிக்கூடங்களுடன் கூடிய வீட்டு வசதித் திட்டம் ஒன்று தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை அறிந்து, இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் மகிழ்ச்சியடைவர். (மேசையைத் தட்டும் ஒலி) இது இந்தியாவிலேயே மிகப்பெரிய அளவிலான வீட்டு வசதித் திட்டமாகும். நெசவாளர்களுக்குரிய இந்த தறிக்கூடத்துடன் கூடிய வீடுகளைக் கட்டும் திட்டத்திற்கு அடுத்த நிதியாண்டிலும் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படும்.



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

இந்த அரசு, மத்திய அரசின் நிதியுதவியுடன் ரூபாய் 73 கோடி செலவில் 'கோ—ஆப்டெக்ஸ்' நிறுவனத்தை திருத்தியமைக்கக் கருதியுள்ளது. பல்லடம், திருச்செங்கோடு, ஈரோடு மற்றும் ஆண்டிப்பட்டி ஆகிய இடங்களில் நாடா இல்லாத் தறிப் பூங்காக்கள் (Shuttleless Weaving Parks) நான்கு நிறுவப்பட்டு வருகின்றன. 2004—2005 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில், கைத்தறி—துணித்தொழில் குறித்த திட்ட ஒதுக்கீடு, ரூபாய் 304.51 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## தகவல் தொழில்நுட்பம்

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையில் உருவான "தகவல் தொழில்நுட்பக் கொள்கை 2002", தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு புதிய சாதனைகளைப் படைக்க உதவியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தைக் கையாளும் பணிகள் துறையின் (ITES) ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 2000—2001 இல் இருந்த 11 சதவீதத்திலிருந்து, 2002—2003 இல் 17 சதவீதமாக வியத்தகு வளர்ச்சியடைந்துள்ளது. இந்தச் சாதனையை மேலும் வலுப்படுத்தத் தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

மாமல்லபுரம் செல்லும் சாலையில் சோளிங்கநல்லூரில் அறிவுத்திறன் சார்ந்த தொழில் நகரியம் (Knowledge Industry Township) 2004—2005—இல் வடிவமைக்கப்படும். மொத்தம் ரூபாய் 127.41 கோடி செலவில், மத்திய கைலாஷ் சந்திப்பையும் மாமல்லபுரத்தையும் இணைக்கும்வகையில், தகவல் தொழில்நுட்ப விரைவுப் பாதைக்கானத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தொடங்கியுள்ளார்கள். இந்த விரைவுப் பாதையில் அமையப்பெறும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை இணைப்பதற்கு உலகத்தரம் வாய்ந்த சாலை வசதியினை இத்திட்டம் ஏற்படுத்தும். இப்பகுதியிலுள்ள பெரும்பரப்பு, திட்டமிட்ட வளர்ச்சியின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்டு, தகவல் தொழில்நுட்ப வளைகுடாப் பகுதி என அழைக்கப்படும். சென்னையைத் தவிர கோயம்புத்தூர் மாநகரமும், தகவல் தொழில்நுட்பம்/தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணி ஆகியவற்றிற்கான முதலீட்டைப் பெறும்வகையில் மேம்படுத்தப்படும். தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளில் தமிழ்நாட்டின் ஒப்பீட்டு அனுகூலங்களை நிலைப்படுத்தும் ஒருபெரும் முயற்சியாக தகவல் தொழில்நுட்பவியலைக் கையாளும் பணிகளின்

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

பாடத்திட்டத் தொகுப்பு ஒன்று மேல்நிலைப் பள்ளி கணினி அறிவியல் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால் இத்துறையில் வேலைவாய்ப்பு வசதிகளைப் பெறுவதற்கு நமது இளைஞர்கள் தயார் செய்யப்படுவர்.

பிற்பகல் 3—50

### சுற்றுலா வளர்ச்சி

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தொழில் ரீதியான மற்றும் தொலைநோக்கு சுற்றுலா மேம்பாட்டுக் கொள்கையினால் தமிழ்நாடு கவர்ச்சிமிகு சுற்றுலாத் தலம் என்ற பெருமையினைப் பெற்றுள்ளது. இது, புதிய வாய்ப்புகளை உருவாக்கியதோடு உள்ளூர் சேவைப்பணித் தொழிலுக்கு ஒரு பெரிய உத்வேகத்தை அளித்துள்ளது. 2000—2001 ஆம் ஆண்டில் வரவு—செலவுத் திட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கென ஒதுக்கீடு ரூபாய் 5 கோடி என்றிருக்க, 2004—2005 ஆம் ஆண்டில் இது ரூபாய் 30.35 கோடியென பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பொதுத் துறையும் தனியார் துறையும் இணைந்து செயல்படும் புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்த அரசு ஆடம்பர வரி வீதங்களைக் குறைத்துள்ளதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில் தற்போது உணவகத் தொழில் விரைந்து முன்னேறி வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆதாயம் ஈட்டும் நிறுவனமாக மாற்றப்பட்டுள்ளது.

### நல்லாளுமைக்கான மின் ஆளுமை

நல்ல ஆளுமைக்குத் திறமையான, ஒளிவு மறைவற்ற, மக்கள் பங்கேற்கும் நிருவாக அமைப்பு தேவை. நிருவாகத் திறமையையும், பணி வழங்கலையும் பெரிய அளவில் மேம்படுத்த இந்த அரசு மின் ஆளுமையை மேற்கொண்டுள்ளது. மாநிலத்தின் தலைமைச் செயலகம் ஏற்கெனவே தொலைத்தூரத் தொடர்பு (Video Conferencing) மூலம் மாவட்டத் தலைமையிடங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நீதிமன்றங்களையும், சிறைச்சாலைகளையும் தொலைதூரத் தொடர்பு மூலம் இணைத்துள்ளோம்.

மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் சேவைப் பணிகளின் தரத்தை மேம்படுத்தும்வகையில், பெருமளவில் மக்கள் தொடர்புடைய பத்து துறைகள் மற்ற நிறுவனங்கள் எடுத்துக் கொள்ளப்படும். வணிகவரி, பத்திரப்பதிவு, கருவூலக் கணக்கு, போக்குவரத்து மற்றும் நில அளவை



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

மற்றும் தீர்வை ஆகிய துறைகளில் மின் ஆளுமைத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக வரவு—செலவுத் திட்டத்தில் ரூபாய் 23 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. அலுவலகங்களுக்கிடையே எளிதில் அலுவலகத் தகவல் பரிமாற்றத்திற்கும், புள்ளிவிவரங்களை எளிதில் பகிர்ந்துகொள்வதற்கும் உதவும்வகையில், 2004—2005 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில், தமிழ்நாடு மாநில விரிபரப்பு வலையமைப்பு (Tamil Nadu State Wide Area Network) ஒன்றை ஏற்படுத்த ரூபாய் 8 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

### ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்புறுதி வளையம்

1990—வது ஆண்டுகளின் முற்பகுதியில், பொருளாதார நிலைப்பாட்டையும், அமைப்பு ரீதியிலான மாற்றங்களையும் மத்திய அரசு துவக்கியபொழுது, நலிவுற்றோர், ஒதுக்கப்பட்டவர்கள் மற்றும் வறியோர் ஆகியோர் நலனை, இச்சீர்திருத்த நடைமுறைகளின் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்புறுதி வளையம் ஏற்படுத்தும் கொள்கை ஒன்றை முன்மொழிந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் நிதி நிலைச் சீர்திருத்த நடவடிக்கைகள் சமுதாயத்தின் எந்தவொரு பிரிவினருக்கும் பாதிப்பு ஏற்படாதவகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வேறு எந்தவொரு மாநிலத்திலும் இது சாத்தியமாகவில்லை. இது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு சாதனையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு எதிர்கொண்டுள்ள நிதி இடர்பாட்டின் தன்மையையும் கடுமையையும் பொருட்படுத்தாது ஏழை எளியோருக்கான ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையம் அமைப்பதில் எந்தவிதக் குறைபாடும் இருக்கக்கூடாது என்று வலியுறுத்தி செயலாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களையே இப்பெருமை சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம் சமூகப் பாதுகாப்பு வளையம் குறிப்பிடத்தக்க வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2004—2005 வரவு—செலவுத் திட்டத்தில் ஒட்டுமொத்த சமூகப் பாதுகாப்பு வளையத்திற்கு மொத்த ஒதுக்கீடு ரூபாய் 5329.28 கோடியாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

## மனிதவள மேம்பாடு

### அனைவருக்கும் கல்வி

ஒரு கிலோமீட்டர் வளையத்திற்குள் உள்ள குடியிருப்புப் பகுதிகள் அனைத்திற்கும் பயன்தரும் வகையில் ஒரு தொடக்கப் பள்ளி ஏற்படுத்தப்பட்டுள்ள தனிச் சிறப்பினை 2003—2004 ஆம் ஆண்டில் தமிழ்நாடு பெற்றுள்ளது. இந்த அரசு 2004—2005 ஆம் ஆண்டில் 364 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தும். இதனால் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமங்களும் எளிதாகவும் வசதியாகவும் அணுகக்கூடிய நடுநிலைப் பள்ளிகளைப் பெறுவது உறுதி செய்யப்படும். மேலும், 2004—2005 ஆம் ஆண்டில் 30 நடுநிலை மற்றும் 30 உயர்நிலைப் பள்ளிகளை முறையே உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

"அனைவருக்கும் கல்வித்" திட்டத்தின்கீழ், பள்ளிகளிலுள்ள கட்டமைப்பு வசதிகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக 2002—2003 மற்றும் 2003—2004 ஆம் ஆண்டுகளில் இந்த அரசு ரூபாய் 506.13 கோடி செலவிட்டுள்ளது. 600 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கிலமொழி பயிற்றுவிக்கும் ஆய்வகக் கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. கணினிக் கல்வி விருப்ப பாடமாக கற்பிக்கப்படுவது 2004—2005 ஆம் ஆண்டில் மேலும் 400 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு விரிவுபடுத்தப்படும். இதன் மூலம், 1,597 அரசு மேல்நிலைப் பள்ளிகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்படும். அடுத்த நிதியாண்டில் ரூபாய் 5.30 கோடி செலவில் 500 உயர்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வித் திட்டம் மேற்கொள்ளப்படும். பள்ளிக் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 3937.29 கோடியாக இருந்தது. இது 2004—2005 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 4202.77 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3—55

தொழில்நுட்பக் கல்வித்தர மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக வங்கியின் நிதியுதவி பெறுவதற்கான அனுமதியை தமிழ்நாடு பெற்றுள்ளது என்பதை அறிவதில் இந்த மன்றத்தின் உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் ஐந்து வருட-



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

கால அளவில் ரூபாய் 300 கோடி மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளப்படும். அடிப்படை அறிவியல் துறைகள் சிறந்து விளங்க இந்திய அறிவியல் நிறுவனத்தை (Indian Institute of Science) ஒத்த தேசிய அறிவியல் நிறுவனம் ஒன்று சென்னையில் ஏற்படுத்தப்படும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இது சென்னைப் பல்கலைக்கழகமும் அண்ணா பல்கலைக்கழகமும் இணைந்து மேற்கொள்ளும் கூட்டு முயற்சியாகும். உயர் கல்விக்கான மொத்த நிதி ஒதுக்கீடு நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 614.70 கோடி என்றிருக்க, அது 2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 649.81 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

### விளையாட்டு மேம்பாடு

2003—2004 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுகளுக்கான ஒதுக்கீடு ரூபாய் 27.27 கோடியாக இருந்தது; அது 2004—2005 வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 48.14 கோடியாக பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாநில அளவில் விளையாட்டுகளுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கும், விளையாட்டு வீரர்களின் உடல்திறனைக் கண்டறிவதற்கும், விளையாட்டில் ஆர்வத்தைத் தூண்டுவதற்கான பயிற்சிகளுக்கும் தமிழ்நாட்டில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவதற்கும் அடுத்த நிதியாண்டில் முக்கியத்துவம் அளிக்கப்படும். தமிழ்நாட்டில் உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டிற்கான தனித்தொரு பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

### தமிழ் வளர்ச்சி

தமிழ்மொழி மேம்பாடு இந்த அரசின் மிக உயர்ந்த கவனத்தைப் பெற்றுள்ளது. இந்தக் கல்வி ஆண்டிலிருந்து அனைத்துப் பள்ளிகளிலும் எல்.கே.ஜி. முதல் 12 ஆம் வகுப்பு வரையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய சீரிய சிந்தனையில் உருவான அறிவியல் தமிழ் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய் 5.42 கோடி செலவில் அறிவியல் தமிழ்ப் பாடப்புத்தகங்களை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கியுள்ளோம். தமிழ் இணையப் பல்கலைக்கழகம், 2004—2005 ஆம் ஆண்டில், உலகளவில் தமிழ்

தேடுபொறி (Search Engine), வணிகத் தமிழுக்கான இணைய உள்ளடக்கம் (Web content), தமிழ் இணைய வகுப்பறைகள் ஆகியவற்றை வடிவமைப்பதற்கான திட்டங்களை மேற்கொள்ளும்.

## மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலன்

மக்களுக்கு எளிதில் பெறத்தக்கதும் தரமானதுமான சுகாதார வசதிகளைக் கிடைக்கச் செய்வதில் தமிழ்நாடு வியத்தகு சாதனை புரிந்துள்ளது. இதனை முக்கிய நல்வாழ்வுக்கான குறியீடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திலிருந்து அறியலாம். 2000 ஆம் ஆண்டில், குழந்தை இறப்பு வீதம் (IMR) ஆயிரத்திற்கு 51 என்ற நிலையிலிருந்து, 2002 ஆம் ஆண்டில் ஆயிரத்திற்கு 44 என்ற அளவிற்குக் குறைந்துள்ளது. இதேபோன்று இந்தக் கால அளவில் பிறப்பு வீதம் ஆயிரம் மக்கட்தொகைக்கு 19.3 என்ற அளவிலிருந்து, 18.5 என்ற அளவுக்குக் குறைந்துள்ளது.

இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து ரூபாய் 86.25 கோடி மொத்தச் செலவில், 746 சுகாதாரத் துணை மையங்களுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதோடு, 93 ஆரம்ப சுகாதார மையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) எம்.ஆர்.ஐ. (MRI), சி.ட்டி.ஸ்கேன் (C.T. Scan), ஈ.சி. ஜி. (ECG), ஈ.ஈ.ஜி (EEG), அல்ட்ரா சவுண்ட் மற்றும் எக்ஸ்—ரே போன்ற வசதிகள் கொண்ட ஏழு வட்டார நோய் அறி மையங்கள் ரூபாய் 21 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. சாலை விபத்துகளில் உயிரிழப்பைக் குறைப்பதற்குத் தனிமுக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் 73 விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4—00

ரூபாய் 9.34 கோடி செலவில் பொதுமக்களுக்கு அவர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே தரமான மருத்துவ சேவையை அளிக்கும் வகையில் மொத்தம் 571 சிறப்பு சுகாதார முகாம்கள் நடத்தப்பட்டன. இதன் மூலம் 11.38 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர். 56.65 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் 2003—2004 ஆம் ஆண்டில் பள்ளி மருத்துவ முகாம் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

மகப்பேறு காலத்தில் தாய்மார்கள் ஆயிரம் மகப்பேறுக்கு இறப்பு வீதம் 1.3 என்ற வீதத்தில் இருப்பதைக் குறைப்பதற்கான உறுதியான நோக்குடன், ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது இரண்டு





மருத்துவமனைகளில் 24 மணிநேர மகப்பேறு அறுவைச் சிகிச்சையை உள்ளடக்கிய ஒட்டுமொத்த அவசரகால மகப்பேறு கவனிப்பு வசதியைச் செய்து கொடுக்க இந்த அரசு உத்தேசித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) குழந்தை இறப்பு வீதத்தை +மேலும் குறைப்பதற்காக "24 மணி நேர ஒட்டுமொத்த அவசரகால பிறந்த குழந்தை கவனிப்பு வசதியையும்" இந்த மருத்துவமனைகள் அளிக்கும்.

உலக வங்கியின் நிதி உதவியுடன் சுகாதார அமைப்புகள் மேம்பாடுத் திட்டத்தைத் தயாரிப்பதில் பெரும் முன்னேற்றத்தைக் கண்டுள்ளோம். 2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 500 கோடி செலவிலான இந்த நல்ல திட்டம் தொடங்கப்படும். ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் அயல்நாட்டு நிதியுதவி பெறும் பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் (Reproductive Child Health Project) 5 ஆண்டு கால அளவில் செயல்படுத்தப்பட்டவுடன், ஆரம்பச் சுகாதார கட்டமைப்பு வசதி பெருமளவில் வலுப்படுத்தப்படும்.

பிரதம மந்திரி ஸ்வாஸ்த்திய சுரக்ஷா யோஜனா திட்டத்தின் கீழ் புது தில்லியில் அமைந்திருக்கும் அனைத்திந்திய மருத்துவ அறிவியல் நிறுவனத்துக்கு இணையாகத் தமிழ்நாட்டில் ஒரு மருத்துவக் கல்லூரி நிலை உயர்த்தப்படும் என்கின்ற மத்திய அரசின் அறிவிப்பை வரவேற்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பாண்டின் திருத்த மதிப்பீட்டில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறைக்கு ரூபாய் 1304.31 கோடியாக இருந்த ஒதுக்கீடு, வரவு—செலவுத் திட்டத்தில் ரூபாய் 1387.77 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## பெண்ணுரிமை

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்கள் முன்மாதிரியாகத் திகழ்வது இம்மாநிலத்திலுள்ள இலட்சோப இலட்சம் பெண்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) ஊக்கமளிப்பதாக இருந்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேரொளிமிக்க முன்மாதிரியாகத் திகழ்வதனால் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேரொளிமிக்க முன்மாதிரியாகத் திகழ்வதனால் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் பேரொளிமிக்க முன்மாதிரியாகத் திகழ்வதனால் தமிழ்நாட்டில் பெண்ணுரிமை நிலைநாட்டப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்புது உத்வேகம் மாநிலத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் பரவியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) முன்னர் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பெண்கள், வாழ்க்கையின்

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

ஒவ்வொரு துறையிலும் தற்போது பீடுநடை போடுகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசின் அனைத்துச் சட்டம் மற்றும் சட்டம்சாராக் குழுக்களிலும் பெண்களுக்கு 33 சதவீதம் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்ய தக்க நடவடிக்கை எடுத்துள்ள நாட்டிலுள்ள ஒருசில மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அரசுத் தேர்வாணையத் தலைவர், தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலாளர் போன்ற தலைமைப் பதவிகளைப் பெண்கள் நிருவகித்து வருகின்றனர். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து மகளிர் அதிரடிப்படை நிறுவப்பட்டது மற்றும் முதல் மகளிர் காவல்படை உருவாக்கப்பட்டது ஆகிய நடவடிக்கைகள் மகளிர், ஆண்களுக்கு நிகராகப் பங்கேற்று (மேசையைத் தட்டும் ஒலி) ஆண்களைவிடச் சிறந்த முறையிலும் செயல்படுவர் என்பதை நிரூபித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

1992 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம் விரைவாக வளர்ந்து பெண்ணுரிமைக்கான ஒரு மாபெரும் இயக்கமாக உருவெடுத்துள்ளது. 2004—2005 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் மகளிர் திட்டத்திற்காக ரூபாய் 20 கோடி ஒதுக்கியுள்ளோம். பயிற்சித் திட்டங்கள், தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் புதிய குழுக்கள் அமைத்தல் ஆகியவைகளுக்கும் இது உதவும். 2004—2005 ஆம் ஆண்டில் கூடுதலாக 5 இலட்சம் மகளிரைச் சேர்த்து மேலும் 25,000 சுய உதவிக் குழுக்களை அமைக்க இயலும் என்று நம்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4—05

## சத்துணவு

இந்த அரசின் முனைப்பான செயலாக்கத்தினால் துணை ஊட்டச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் குழந்தைகளின் சேர்க்கை மற்றும் உணவின் தரம் வெகுவாக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 77 இலட்சம் குழந்தைகள் பயன்பெறுகின்றனர். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உறுதியளித்தவாறு, மதிய உணவுப் பணியாளர்களுக்கு ஊதிய நிலுவைத் தொகைகளை வழங்க இந்த அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. 2004—2005 ஆம் ஆண்டில் சத்துணவுத் திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 685.41 கோடியாகும்.



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்

தரமான கல்வி, கடன்வசதி, சுய வேலைவாய்ப்பிற்கான பயிற்சி, வீட்டுவசதி போன்றவற்றை எளிதில் கிடைக்கச் செய்வதன்மூலம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அதிகாரமளித்தல் எனும் இந்த அரசின் அணுகுமுறை நல்ல வரவேற்பினைப் பெற்றுத்தந்துள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் மேம்பாடடைவதற்கான வளர்ச்சித் திட்டச் செயலாக்கம் பரவலாக்கப்பட்டுள்ளது. வறுமை ஒழிப்புச் செயல் திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 1.43 இலட்சம் மக்களுக்கு ரூபாய் 65.99 கோடி அளவிற்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் இச்சமுதாயங்களைச் சேர்ந்த 7000 நிலமற்ற பெண்கள் பயனடையும் வகையில் நிலமற்றோருக்கு நிலம் வழங்குவதற்கான புதிய திட்டமொன்று மாண்புமிகு அம்மா அவர்களால் தற்போது தொடங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 31.50 கோடி செலவில் 100 புதிய மாணவரில்லங்கள் கட்டப்படும் என்பதை இம்மாமன்றத்தின் உறுப்பினர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) பதினோராம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிட, பழங்குடியின மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவியருக்கு இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்திற்கு வரவு—செலவுத் திட்டத்தில் ரூபாய் 8 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனிற்கான மொத்த நிதி ஒதுக்கீடு நடப்பாண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 429.09 கோடியாக இருந்தது. இது 2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 448.91 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

## பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன்

இந்த வகுப்பைச் சேர்ந்த மக்களின் நலனுக்கான ஒதுக்கீடு 2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 159.79 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்தச் சமுதாயத்தினரின் சமூகப் பொருளாதார முன்னேற்றம் மற்றும் கல்வி அறிவு பெறும் உரிமையைப் பெறுவதற்கான உதவிகளை இந்த அரசு தொடர்ந்து அளிக்கும்.

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

2004—2005 ஆம் ஆண்டில் ரூபாய் 31.50 கோடி செலவில் 100 புதிய மாணவரில்லக் கட்டடங்கள் கட்டப்படும். இந்தச் சமுதாயத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலவசத் தொழிற்கல்வி பெறுவதற்கு ரூபாய் 4.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூபாய் 6 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் இச்சமுதாயப் பெண்களுக்கு ஊக்கத் தொகை அளிக்கும் திட்டம் தொடரப்படும். வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் இச்சமுதாயத்தினருக்கு வீட்டுமனைப்பட்டா மற்றும் ஏனைய கட்டமைப்பு வசதிகளை அளிப்பதற்காக ரூபாய் 2.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## நிதிநிலைமைக் கணிப்புகள்

2003—2004 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகள் இம்மாமன்றத்தின் முன்வைக்கப்பட்டுள்ளன. 2003—2004 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 3933.47 கோடியாக மதிப்பிடப்பட்ட வருவாய்ப் பற்றாக்குறையைத் திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 3699.51 கோடியாக நம்மால் கட்டுப்படுத்த முடிந்துள்ளது. 2003—2004 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 1295.15 கோடியாக இருந்த மொத்தப் பற்றாக்குறை, திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 245.52 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 2003—2004 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் 22,665.90 கோடியாக இருக்கையில், திருத்த மதிப்பீட்டில் இது ரூபாய் 22,850.53 கோடியாக இருக்கிறது. மேலும், 2003—2004 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் மொத்த வருவாய் இனச் செலவு ரூபாய் 26,599.37 கோடி என்று இருக்கையில், திருத்த மதிப்பீட்டில் மொத்த வருவாய் இனச் செலவு ரூபாய் 26,550.04 கோடியாக உள்ளது.

பிற்பகல் 4—10

நடப்பாண்டில் திருத்த மதிப்பீட்டில் வருவாய்ப் பற்றாக்குறை வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் உள்ளதைவிடக் குறைவாகக் கொண்டுவரப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது இருந்த குழப்பமான நிதி நிலைமையை, இன்று சீர்செய்துள்ளோம் என்பதில் நாம் பெருமை அடையலாம். (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் வழிவகை நிதிநிலை சீரடைந்துள்ளதோடு, தற்போது செலவுப் பட்டிகளுக்கு உடனடியாகத் தொகை வழங்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டில் நிதிநிலைச் சமன்பாட்டை மீளப்பெற்றதற்கு மாண்புமிகு



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

புரட்சித் தலைவி இதயதெய்வம் அம்மா அவர்கள் தலைமையிலான (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வரசு சிறப்பான முயற்சி எடுத்துள்ளதை அவை உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுவர்.

2004—2005 ஆம் ஆண்டுக்கான வரவு—செலவுத் திட்ட மதிப்பீடுகள் இந்த அவையில் வைக்கப்பட்டுள்ளன. 2004—2005 ஆம் ஆண்டிற்கான வரவுகள் ரூபாய் 24,792.30 கோடியாக இருக்க, மொத்த வருவாய்ச் செலவு ரூபாய் 28,128.73 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ரூபாய் 3336.43 கோடியாக இருக்கும். மொத்த வருவாய் வரவுகளில் வருவாய்ப் பற்றாக்குறையின் பங்கு 13.5 சதவீதமாக இருக்கும். 2004—2005 ஆம் ஆண்டின் இறுதியில் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ரூபாய் 590.47 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2004—2005 ஆம் ஆண்டிற்கான அரசின் நிதிப் பற்றாக்குறை ரூபாய் 6921.77 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. வருவாய் இனங்களில் விதிகளுக்குட்பட்டு உரிய வசூல் நடவடிக்கைகள் மூலமாக வருவாயைப் பெருக்கியும் ஆதாயமற்ற செலவுகளைக் கட்டுப்படுத்தியும் நிதிநிலையைச் சீராக்கும் கொள்கை 2004—2005 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.

## நிலவரி

தொடர்ந்து மூன்றாண்டுகளாக பாதகமான பருவநிலை நிலவி, 2002—2003 ஆம் ஆண்டில் கடும் வறட்சி ஏற்பட்டது. 2003 ஆம் ஆண்டில் பருவமழை அதற்கு முந்தைய ஆண்டைவிட மேலாக இருந்தபோதிலும், வடகிழக்குப் பருவமழை மீண்டும் பொய்த்தது. நிலத்தடி நீரின் அளவும் குறைவாகவே உள்ளது. 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாள் அன்று 2003 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து 2004 ஆம் ஆண்டு ஜூன் வரையிலான பசலி 1413—ல் விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலவரி அனைத்து மாவட்டங்களிலும் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், உள்ளூர் தலவரி, உள்ளூர் தலமேல்வரி ஆகியவையும் தள்ளுபடி செய்யப்படும். அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் அளிப்பதற்காக இவ்வை மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு அளிக்கப்படும் இந்த உதவி காரணமாக, சுமார் ரூபாய் 60 கோடி அளவில் அரசுக்கு வரி இழப்பு ஏற்படும்.

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

## வேளாண்மை வருவாய் மீது வரிகள்

விலைச்சரிவு மற்றும் உற்பத்திச் செலவு அதிகரிப்பு ஆகிய காரணங்களால் கடந்த சில ஆண்டுகளாக தோட்டத் தொழில்களில் தொடர்ந்து இழப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, 1997—98 ஆம் ஆண்டில் மாநில அரசிற்கு ரூபாய் 39.4 கோடி அளவிற்கு வருவாய் ஈட்டித் தந்த வேளாண் வருமான வரி 2002—2003 ஆம் ஆண்டில் ரூபாய் 1.6 கோடி என்ற அளவிற்கு மிகவும் குறைந்துவிட்டது. 2003—2004 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்ட வருவாய் ரூபாய் 1.35 கோடியாக இருக்க இதே வரியை வசூலிப்பதற்கு ஆகும் செலவு ரூபாய் 1.6 கோடியாகும். இவ்வாறாக, வசூலுக்கு ஆகும் செலவு வருவாயை விஞ்சிவிட்டது.

தோட்டத் தொழில் துறைக்குப் புத்துயிர் அளிக்கவும் தேயிலை பயிரிடுவோருக்கு நல்ல விலையை உறுதி செய்யவும், இவ்வரி வசூலுக்கு ஆகும் நிர்வாகச் செலவு கிடைக்கும் வருவாயை விட கூடுதலாக இருப்பதாலும், 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து வேளாண் வருவாய் வரியை ரத்து செய்யலாம் என இவ்வரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4—15

## வணிக வரிகள்

விற்பனை வரியினை உரிய காலத்தில் செலுத்தாவிட்டால் ஒரு மாதத்திற்கு 2 சதவிகிதம் என்ற அடிப்படையில் ஆண்டிற்கு 24 சதவிகிதம் வட்டி விதிக்கப்படுகிறது. வட்டிவிகிதங்கள் மிக உயர்வாக இருந்த காலத்தில் இவ்வாறு நிர்ணயிக்கப்பட்டது. தற்போது, வட்டி விகிதங்கள் குறைந்துள்ளதால் புதிய முறையில் வட்டி விகிதத்தை குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்படி, முதல் 90 நாட்களுக்குள் செலுத்தப்படும் வரிக்கு மாதத்திற்கு 1.5 சதவிகிதமும், அதன்பின் மாதத்திற்கு 2 சதவிகிதமும் விதிக்கப்படும். வரியினை குறித்த காலத்தில் செலுத்த இந்தப் புதிய முறை உதவும். 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் இதற்காகக் கொண்டுவரப்படும்.

உலராத பேரீச்சம் பழத்தின் மீது தற்போது 12 சதவிகிதம் வரி விதிக்கப்படுகிறது. பொதுவாக உணவுப் பொருட்கள் 4 சதவிகித வரிவிகித



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ளன. பால்பவுடர், இனிப்பு, மிட்டாய் வகைகள், ஊறுகாய், சாக்லெட்கள் போன்றவை 4 சதவிகித வரிவிகித அட்டவணையில் சேர்க்கப்பட்டுள்ள பிற பொருட்களாகும். உலராத பேரிச்சம் பழம் உணவுப் பொருளாக உள்ளதால், இதன் மீது விதிக்கப்படும் வரியினை 4 சதவிகிதமாகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கணினி உபரி பொருட்கள் மற்றும் உதிரி பாகங்கள் மீது விற்பனை வரி 4 சதவீதமாகும். மத்திய விற்பனை வரியும் 4 சதவீதமாகும். தமிழ்நாட்டை கணினி வன்பொருள் (Computer hardware) மையமாக நிலைநிறுத்தும் நமது திட்டத்தின் ஒரு பகுதியாக மத்திய விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய விற்பனை வரிச் சட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் மூலம் இடைமாநில விற்பனைக்கு "சி" படிவம் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சிக்கல் உருவாகியுள்ளது. இதனால், பதிவு பெறாத வணிகர்களுக்கு இடைமாநில (inter State) விற்பனையின் மீது 10 சதவிகிதம் மத்திய விற்பனை வரி கட்டாயமாக வசூலிக்கப்பட வேண்டியுள்ளது. வடமாநிலங்களில் உள்ள சிறு வணிகர்களுக்கு விற்பனை செய்யும் தமிழ்நாட்டிலுள்ள பின்னலாடைத் தொழில் துறைக்கு இதனால் பிரச்சினை எழுந்துள்ளது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மத்திய நிதி அமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். இது சட்டமாக்கப்பட்டு விட்டதனால், பின்னலாடை இடைமாநில விற்பனைக்கு முதலில் 10 சதவிகித வரிவிதிக்கப்பட்டு பின்னர் அதில் 9 சதவிகிதத் தொகை ஒரு குறிப்பிடத்தக்க மானியமாகத் திருப்பியளிக்கப்படும். இதனால் இறுதி வரிவிகிதம் 1 சதவிகிதமாக மட்டும் இருக்கும். இந்தச் சலுகை ஓராண்டில் பின்னலாடையை வெளிமாநிலத்திலுள்ள கிளைகளுக்கு அனுப்பும்பொழுதோ அல்லது வெளிமாநில முகவர் மூலம் விற்பனை செய்தாலோ அவர்களுக்கு இது பொருந்தாது. (மேசையைத் தட்டும் ஒலி)

உயிர்காக்கும் மருந்துகளுக்கு ஏற்கெனவே வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது சிறுநீரகச் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் (CAPD) என்ற திரவமும் உயிர்காக்கும் இன்றியமையாத மருந்தாக இருப்பதால் இதற்கும் வரிவிலக்கு அளிக்க உத்தேசிக்கப்படுகிறது.

மேலும் எய்ட்ஸ்ஸால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளின் சிகிச்சைக்கு பின்வரும் பத்து மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன:

1. ZIDOVUDINE
2. LAMIVUDINE
3. STAVUDINE
4. DIDANOSINE
5. NEVIRAPINE
6. EFAVIRENZ
7. NELFINAVIR
8. INDINAVIR
9. SEQUINAVIR
10. RETONAVIR

இந்த மருந்துகளை உயிர்காக்கும் மருந்துகளின் பட்டியலில் சேர்த்து விற்பனை வரி விலக்களிக்கப்படும்.

மத்திய அரசின் நிறுவனமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGC) தமிழ்நாட்டிலுள்ள எரிவாயுக் கிணறுகளிலிருந்து இயற்கை எரிவாயுவை உற்பத்தி செய்து பின்னர் கேஸ் அத்தாரிட்டி ஆப் இந்திய லிமிடெட் (GAIL) என்ற மற்றொரு மத்திய அரசு நிறுவனத்திற்கு விற்பனை செய்து வருகிறது. தற்போது நடைமுறையில் உள்ள வரி விதிப்பு விகிதத்தின் கீழ் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனம் (ONGC), GAIL நிறுவனத்திற்கு செய்யும் முதல் விற்பனையின் மீது 8 சதவிகித வரி விதிக்கப்படுகிறது. பின்னர், தமிழ்நாடு மின்சார வாரியம் உட்பட பிற உபயோகிப்பாளர்களுக்கு GAIL நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் இரண்டாம் நிலை விற்பனைக்கு 1 சதவிகித விற்பனை வரி விதிக்கப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம், அதன் அனைத்து கொள்முதல்களுக்கும் 4 சதவிகிதம் வரி செலுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்கும் இயற்கை எரிவாயுவிற்கு ஏற்கெனவே முதல் நிலையில் 8 சதவீத வரி விதிக்கப்பட்டுவிட்டதால் இது சாத்தியமாகாது. எனவே தமிழ்நாடு



மின்சார வாரியத்திற்கு GAIL நிறுவனம் விற்பனை செய்வதற்காக மட்டும் ONGC நிறுவனத்திடமிருந்து வாங்கும் இயற்கை எரிவாயுவின் மீதான முதல் நிலை விற்பனை வரி 4 சதவிகிதமாகக் குறைத்து விதிக்கப்படும். மேலும் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு GAIL நிறுவனம் செய்யும் இரண்டாம் நிலை விற்பனைக்கு மறுவிற்பனை வரியிலிருந்தும் விலக்கு அளிக்கப்படும்.

பிற்பகல் 4—20

மாசுக் கட்டுபாட்டு சாதனங்களை நிறுவுவதற்கு ஊக்குமளிக்கும் வகையில் மாசுக் கட்டுப்பாடு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் சாதனங்கள் மீதான வரியினை திருத்தியமைத்து பொதுவான 4 சதவிகித வரிவிகிதமாகக் குறைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாசுக் கட்டுப்பாடு வாரியத்திலிருந்து இவ்வகை சாதனங்களுக்கான பட்டியல் பெறப்படும்.

கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு கைவினைப் பொருட்கள் மீதான விற்பனை வரி விகிதத்தை 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இசைக் கலைஞர்களின் நலன் கருதி இந்திய இசைக் கருவிகளுக்கு தற்பொழுது விதிக்கப்பட்டு வரும் 4 சதவிகித வரியிலிருந்து முழுவதுமாக வரிவிலக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது கோழித் தீவனத்திற்கு முழுவதுமாக வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. சுண்ணாம்புக்கல், கோழித் தீவனத் தயாரிப்பில் சிறிதளவு சேர்க்கப்படுகிறது. சுண்ணாம்புக்கல் மீதான விற்பனை வரி 12 சதவிகிதமாக உள்ளது. கோழித் தீவனம் தயாரிக்க கொள்முதல் செய்யப்படும் சுண்ணாம்புக்கல் மீதான விற்பனை வரியை 12 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாகக் குறைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவு நிறுவனங்கள் விற்பனை செய்யும் நுகர்வோர் பொருட்கள் மீது ஒரு சதவிகிதம் மறு விற்பனை வரி விதிக்கப்படுகிறது. கூட்டுறவு அங்காடிகளில் பொருட்களை வாங்கும் நுகர்வோர் பயன்பெறும் வகையில் கூட்டுறவு சங்கப் பதிவாளரின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நுகர்வோர் கூட்டுறவு பொருட்கள் கொள்முதல் மற்றும் விற்பனை செய்யும் கூட்டுறவு அங்காடிகளுக்கும் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம் பிரிவு 17ன்கீழ் விதிக்கப்படும் மறு விற்பனை [illegible]வதிலிருந்து விலக்கு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

18509
600 008
1, 3, P04
P04.5

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

சட்டத் திருத்தம் தேவைப்படும் மாற்றங்களைத் தவிர்த்து நான் அறிவித்த ஏனைய வரி விதிப்பு மாற்றங்கள் அனைத்தும் இதற்கான அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும்.

## முத்திரைத்தாள் வரி

டாக்டர் ராஜா J. செல்லையா தலைமையிலான வரி சீரமைப்பு மற்றும் வருவாய்ப் பெருக்க ஆணையம் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் சொத்து மாற்ற கிரைய ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வை மற்றும் மிகு வரி சதவீதங்களை அரசு ஏற்கெனவே குறைத்துள்ளது. இது அனைவராலும் வரவேற்கப்பட்டுள்ளது. மேலும் சொத்து மாற்றங்களை எளிமையாக்கவும் சட்ட வரையறைகளின்படி முத்திரைத் தீர்வைகளைச் செலுத்தவும் இன்னும் பிற ஆவணங்களின் மீதான முத்திரைத் தீர்வை சதவீதங்களை எளிமையாக்கிடவும் குறைத்திடவும் இந்த ஆணையம் பரிந்துரைத்துள்ளது. இந்தப் பரிந்துரைகளை விரிவாகப் பரிசீலித்துள்ளோம். பின்வரும் நடைமுறைகளை அறிமுகப்படுத்த உள்ளோம்.

தற்போது குடும்ப உறுப்பினர்களிடையே மேற்கொள்ளப்படும் சொத்து மாற்றங்கள் ஏற்பாடு (Settlement), விடுதலை (Release), பாகப்பிரிவினை (Partition), மற்றும் கூட்டாண்மை கலைப்பு (Dissolution of partnerships) ஆகிய ஆவணங்கள் வழி நடைபெறுகின்றன. குடும்ப உறுப்பினர்களிடையேயான ஏற்பாடு மற்றும் விடுதலை முறையிலான சொத்து மாற்ற ஆவணங்களுக்கு ஆவணத்தில் தெரிவிக்கப்பட்ட மதிப்பின்மீது 4 சதவீதம் முத்திரைத் தீர்வை விதிக்கப்படுகின்றது. பாகப்பிரிவினை பற்றிய ஆவணங்களுக்கு சொத்து மதிப்பின்மீது 2 சதவீதம் முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகின்றது. கூட்டாண்மை கலைப்புக்குப்பின் ஏற்படும் பாகப்பிரிவினை பற்றிய ஆவணங்களுக்கு பிரிக்கப்பட்ட பங்குகளின் சந்தை மதிப்பிற்கு 3 சதவீதம் முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகின்றது. மேலே கூறப்பட்டுள்ள ஒவ்வொரு ஆவணத்திற்கும் 1 சதவீதம் பதிவுக் கட்டணமாக உச்சவரம்பின்றி வசூலிக்கப்பட்டு வருகிறது. டாக்டர் ராஜா J. செல்லையா தலைமையிலான வரிச் சீரமைப்பு மற்றும் வருவாய்ப் பெருக்க ஆணையம் இந்த ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வையை 1 சதவீதமாகக் குறைத்திடவும் அதிகபட்சமாக ரூபாய் 2 இலட்சம் நிர்ணயித்திடவும் பரிந்துரைத்துள்ளது. இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் சில மாற்றங்களைச் செய்திட முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலே



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

கூறப்பட்டுள்ள அனைத்து வகையான ஆவணங்களுக்கும் முத்திரைத் தீர்வை, சொத்தின் சந்தை மதிப்பின்மீது 1 சதவீதமாகவும், உயர்ந்தபட்ச முத்திரைத் தீர்வை ரூபாய் 10,000 எனக் குறைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) பதிவுக் கட்டணம் 1 சதவீதம் எனவும் அதிகபட்ச கட்டணம் ரூபாய் 2,000 எனவும் நிர்ணயிக்கப்படும். பாகப்பிரிவினை ஆவணங்களைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு பங்கிற்கும் முத்திரைத் தீர்வையும் பதிவுக் கட்டணமும் விதிக்கப்படும். விவசாய நிலம் சம்பந்தமான பாகப்பிரிவினையைப் பொறுத்தமட்டில் தற்போதுள்ள சலுகைப் பதிவுக் கட்டணங்கள் தொடரப்படும்.

கடன் அளிப்பதற்கும் கடன் பெறுவதற்கும் அடமான ஆவணங்கள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான நிதி நிறுவனங்கள் மற்றும் வர்த்தக வங்கிகள் தாங்கள் அளிக்கும் கடனுக்கு பாதுகாப்பாக இந்த அடமானத்தைப் பெறுகின்றன. இதுபோன்ற நடவடிக்கைகளை முற்றிலும் எளிமையாக்கிட முடிவு செய்துள்ளோம். வர்த்தக வங்கிகளும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் வசூலிப்பதை எளிமையாக்கிடக் கோரியுள்ளன. எனவே, சொத்து ஒப்படைக்கப்படாத சாதாரண அடமான ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை 4 சதவீதத்தில் இருந்து 1 சதவீதமாகக் குறைக்கப்படும் எனவும் (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான உச்சவரம்பு ரூபாய் 20,000 எனவும் நிர்ணயித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பதிவுக் கட்டணம் 1 சதவீதமாகவும் இதற்கான உச்சவரம்பு ரூபாய் 5,000 எனவும் விதிக்கப்படும்.

பிற்பகல் 4—25

சொத்து ஒப்படைப்புடன்கூடிய அடமான ஆவணங்களுக்கு தற்போதைய முத்திரைத் தீர்வை கடன் தொகையின்மீது 6 சதவீதம் என்பது கடன் தொகையின்மீது 3 சதவீதம் எனக் குறைக்கப்படும். மிகுவரி (Transfer Duty) கடன் தொகையின்மீது 2 சதவீதம் என்பது 1 சதவீதமாகக் குறைக்கப்படும். இவ்வாறாக மொத்தக் கட்டணம் கடன் தொகையில் 4 சதவீதமாக அமையும். பதிவுக் கட்டணம் முன்போலவே 1 சதவிகிதமாகவும் அதற்கான உச்சவரம்பு ரூபாய் 2 இலட்சம் எனவும் நிர்ணயிக்கப்படும்.

உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு நிதி நிறுவனங்களால் கையாளப்படும் பிரிதொரு முக்கிய ஆவணமாகும். இத்தகு நடவடிக்கைகளை முறையாகப் பதிவு செய்திடுவதை ஊக்குவிக்க, குறிப்பு,

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

குறிப்பாணை மற்றும் பிற ஆவணங்களையும் உரிமை ஒப்படைப்பு ஆவணங்களாகக் கருத முடிவெடுக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த ஆவணங்களுக்கு கடன் தொகையின்மீது 5 சதவீதம் முத்திரைத் தீர்வையும் 1 சதவீதம் பதிவுக் கட்டணமும் விதிக்கப்படுகின்றது. இது தொடர்ந்து விதிக்கப்படும். தற்போதுள்ள முத்திரைத் தீர்வைக்கு உச்சவரம்பு ரூபாய் 5,000 எனவும் பதிவுக் கட்டணத்திற்கு ரூபாய் 1,000 எனவும் நிர்ணயிக்கப்படும். இந்தப் புதிய ஏற்பாடு இந்த வகையான ஆவணங்களை எளிதில் பதிவு செய்திட வழிவகுக்கும்.

பரவலாகப் பயன்படுத்தப்படும் மற்றொரு ஆவணம் குத்தகை. முறையாக முத்திரையிடப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள், சொத்து மாற்றங்களில் ஒரு தெளிவினையும் ஒளிவுமறைவற்ற தன்மையையும் உறுதி செய்யும். தற்போதைய முத்திரைத் தீர்வை விகிதம் மிகவும் சிக்கலானதாகவும் பல அடுக்குகளைக் கொண்டதாகவும் உள்ளது. இந்த ஆவணங்களுக்கான முத்திரைத் தீர்வையைப் பின்வருமாறு சீரமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த விகிதம் முழு வாடகை (Total Rent), மற்றும் முன்பணம் (Advance) அல்லது அபராதம் (Fine) அல்லது தவணைக் கட்டணம் (Premium) ஆகியவைகளின்மீது வசூலிக்கப்படும்.

| குத்தகை காலம் | உத்தேசிக்கப்பட்டுள்ள விகிதம் |
|---|---|
| 30 ஆண்டுகள் வரை | 1% |
| 31 ஆண்டுகள் முதல் 99 ஆண்டுகள் வரை | 4% |
| 100 ஆண்டுகள் மற்றும் அதற்குமேல் | 8% |

முழு வாடகை, முன்பணம் அபராதம் மற்றும் தவணைக் கட்டணம் ஆகியவற்றின் மீதான பதிவுக் கட்டணம் 1 சதவீதம் ஆகும். இதற்கான உச்சவரம்பு ரூபாய் 5,000 என்ற நிபந்தனைக்குட்பட்டு விதிக்கப்படும்.

கைமாற்றுத் தொகையுடன்கூடிய அதிகார ஆவணம் (Power of Attorney for Consideration) மற்றொரு முக்கிய ஆவணமாகும். தற்போதைய முத்திரைத் தீர்வை 6 சதவீதம் என உயரளவில் உள்ளதால் இந்த அதிகார ஆவணங்கள் பொதுவாக பதிவு செய்யப்படுவதில்லை. ஆகையால் இது தவறாகப் பயன்படுத்தப்பட்டு, சொத்து வாங்கும் ஏதுமறியாத பொதுமக்கள் ஏமாற்றப்பட வாய்ப்புள்ளது. சொத்து வாங்குபவர்கள் பதிவுபெற்ற அதிகார ஆவணங்களை ஏற்பது என வற்புறுத்தினால் மட்டுமே இதனைச் சரிசெய்ய இயலும். வரிச் சீரமைப்பு மற்றும் வருவாய்ப் பெருக்க



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

ஆணையம் பரிந்துரைத்தபடி இதற்கான முத்திரைத் தீர்வையை 6 சதவீதத்தில் இருந்து 4 சதவீதமாகக் குறைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. பதிவுக் கட்டணம் தொடர்ந்து 1 சதவீதமாகவே இருக்கும்.

ஒன்பது வருவாய் மாவட்டங்களில் பட்டா பாஸ் புத்தகம் அறிமுகப்படுத்தப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். ஆவணங்களைப் பதிவு செய்திட பட்டா பாஸ் புத்தகம் கட்டாயமாக தாக்கல் செய்யப்பட வேண்டியது ஒரு நிபந்தனையாகும். இதனால் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. வட்ட அலுவலகங்களில் கணினிமயமாக்கப்பட்ட புதிய நடைமுறைகள் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டன. இதனால் நாளது வரை சரிசெய்யப்பட்ட தேவையான சிட்டா நகல்களை அளிப்பது ஏதுவாகும். எனவே பதிவின் போது பட்டா பாஸ் புத்தகம் தாக்கல் செய்திட வற்புறுத்தத் தேவையில்லை. ஆகவே இந்த நிபந்தனை தளர்த்தப்படும். இதனால் விவசாயிகள் பலன் பெற்று தங்கள் ஆவணங்களை பதிவு செய்து திரும்பப் பெற்றிட வழிவகுக்கும்.

பல்வேறு சட்டங்களின் கீழ் உள்ள தொடர்புடைய பிரிவுகளுக்கு சட்டத்திருத்தம் தேவைப்படும் இனங்கள் தவிர பிற இனங்கள் மீதான கட்டண விகித மாற்றங்கள் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம், 1908 ஆம் ஆண்டு பத்திரப்பதிவுச் சட்டம் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் சட்டங்கள் ஆகியவற்றின் கீழ் உரிய அறிவிக்கை வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும்.

## ஒட்டுமொத்த நிதி நிலவரம்

மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் வரிகள் மீதான பல கருத்துருக்களை கோடிட்டுக் காட்டியுள்ளேன். இந்த வரவு—செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் ஏதுமில்லை என்பதை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆணையின் பேரில் இந்த அரசு பல வரிச் சலுகைகளை அளிக்க உத்தேசித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நிதி நிலைமையைப் வலுப்படுத்த வேண்டியிருக்கும் வேலையில் மக்களுக்கு பயன்தரும் வகையிலும் முதலீட்டுச் சூழலை மேம்படுத்துவதற்காகவும் இந்த சலுகைகளை நீட்டிக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. நான் தற்போது அறிவித்த சலுகைகளை மாண்புமிகு அவை உறுப்பினர்கள் பெருவாரியாக வரவேற்பார்கள் என நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

---

*பக்கம் 59 முதல் 75 வரை இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

*பிற்பகல் 4—30*

நிலவரித் தள்ளுபடி, வேளாண்மை மீதான வரிகளை விலக்கியது மற்றும் மக்களுக்கு பயனளிக்கும் ஏனைய சலுகைகளினால் அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு ரூபாய் 140 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. வரி நிலுவைகளை வசூலிப்பதில் முன்னேற்றம், மேலும் ஆதாயமற்ற செலவுகளை கட்டுப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இது சரிக்கட்டப்படும். இதன் காரணமாக 2004—2005 ஆம் ஆண்டு இறுதிப் பற்றாக்குறை ரூபாய் 590.47 கோடியாகவே இருக்கும். இப்பற்றாக்குறையை தகுந்த நிதி மேலாண்மையின் மூலமும் மத்திய அரசிடமிருந்து உயரிய அளவில் நிதிகளை பெறுவதின் மூலம் ஈடு செய்ய முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

வரவு செலவுத் திட்ட உரையின் இணைப்பில்* தெரிவிக்கப்பட்டுள்ள நடுத்தரக்கால நிதித் திட்டத்தில் எதிர்காலத்திற்கான வழிகாட்டுதல்கள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. இதனை வரவு செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாக படித்ததாக எடுத்துக் கொள்ளலாம். இந்த அரசு எடுத்த முயற்சிகள் நிதிச் சமன்பாட்டை எய்துவதில் ஏற்கெனவே எய்திய முன்னேற்றங்களைத் தொகுப்பதாக இருக்கும். நிதிச் சரிக்கட்டல் குறித்த நடவடிக்கை மிகவும் சிக்கலானதாக உள்ளது. ஏற்கெனவே நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள், நடுத்தரக்கால நிதித் திட்டத்தில், குறிப்பிட்டுள்ள இலக்கு மேலும் முன்னேற்றம் அடைவதற்குரிய கட்டமைப்பை அளிக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து மகிழ்வர்.

2003—2004 ஆம் ஆண்டில் நாம் கண்ட விரைவான முன்னேற்றத்தின் அடிப்படையில் வரும் நிதி ஆண்டில் (2004—2005) இந்த அரசு செயல்படுத்தவேண்டிய திட்டங்கள் மற்றும் பணிகள் குறித்து நான் இங்கு கோடிட்டு காட்டியுள்ளேன். பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தை நமக்கு முன் தொடங்கிய மாநிலங்கள் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து கணிசமான நிதியுதவியை ஏற்கெனவே பெற்றிருந்தன. தமிழ்நாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதயதெய்வம் அம்மா அவர்களுடைய அயராத கடும் உழைப்பினால் மட்டுமே (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) மிகக்குறுகிய காலத்தில் எந்த உதவியுமின்றி வளர்ச்சி மற்றும் வளமை நோக்கிய பாதையில் நாம்

*பக்கம் 59 முதல் 75 வரை இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



2004 பிப்ரவரி 11] [திரு. சி. பொன்னையன்]

வெகுவேகமாக முன்னேறியுள்ளோம். தமிழ்நாட்டில், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நிலைமாறாத கடும் உழைப்பு இல்லையென்றால் (மேசையைத் தட்டும் ஒலி) 1996—2001 கால அளவில் நிதிநிலைச் சீரழிவு படுகுழியில் தள்ளப்பட்ட தமிழ்நாட்டை மீட்பதற்கு இயலாமலேயே போயிருக்கும். உண்மையான தலைவர் பாதகமான ஒரு சூழ்நிலையில்தான் தன்னை நிலைநிறுத்திக் கொள்வார். தமிழ்நாட்டு மக்கள் நலமும் வளமும் பெறவேண்டும் என்பதற்கான முயற்சிகளிலிருந்து சற்றும் வழுவாது ஒவ்வொரு தடையையும் தாண்டி நமது தலைவி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி இதயதெய்வம் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) முன்னின்று நம்மை வழி நடத்தி வருகிறார்கள்.

தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக கடுமையான உழைப்பு மற்றும் முழு உறுதிப்பாட்டிற்கு தக்க வெகுமதி மிக விரைவிலேயே கிடைக்க உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) தங்களது இன்ப துன்பங்களில் பங்கேற்று இடர்ப்பாடுகளின் போது துணை நிற்கும் உண்மையான தலைவரை நமது நீதிபதிகளாகிய பொது மக்கள் தவறின்றி இனங்கண்டு கொள்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இதயதெய்வம் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் தமிழ்நாடு பீடுநடை போடுகிறது என்று உலகளவில் தற்போது பாராட்டப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாகத்தான் உலக வங்கி போன்ற நிறுவனங்கள் தற்போது தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவ முன்வந்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஒளிபொருந்திய, எழுச்சி மிக்க, தலைமையினால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) குறுகிய காலத்தில் இவை அனைத்தையும் சாதிக்க முடிந்தது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

*பிற்பகல் 4—35*

மக்களுக்குச் சிறந்த முறையில் சேவை செய்யும் வகையில் 2004—2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது ஆக்கபூர்வமான கருத்துகளை நான் வரவேற்கின்றேன். இந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில் உதவிய வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறைச் செயலாளர் திரு. ந. நாராயணன், இ.ஆ.ப., அவர்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [2004 பிப்ரவரி 11

இத்துடன் 2004—2005 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிற்கு அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12—2—2004) வியாழக்கிழமை காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4—36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



2004 பிப்ரவரி 11]

## பின்னிணைப்பு

[56 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

### நடுத்தரகால நிதித் திட்டம்

1. தமிழ்நாட்டில் இந்த அரசு 2001 மே திங்களில் பொறுப்பேற்றது. அப்போது மாபெரும் நிதி இடர்ப்பாட்டின் பிடியில் அரசு சிக்கி இருந்தது. மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப்பெரிய பாதிப்பை இந்த நிதி இடர்ப்பாடு ஏற்படுத்தியது. விரிவான ஆய்விற்குப் பின், தமிழ்நாட்டில் மக்களுக்கு ஒட்டுமொத்த நல்வாழ்வை அளிக்க வேண்டுமானால் பெரும் அளவிலான பொருளாதார முன்னேற்றம் மிகமிகத் தேவை என்று தமிழ்நாடு அரசு தீர்மானித்தது. நிலையான பொருளாதார முன்னேற்றத்தை உயரிய அளவில் எய்தவேண்டுமெனில் மாநிலத்தின் பொது நிதி நிலைமை சீர்படுத்தப்படவேண்டும். நிதி நிலையை சீரமைத்து நிலை நிறுத்துதல், முதலீட்டு சூழலை மேம்படுத்துதல், நல் ஆளுகையை கையாளும் சேவைப் பணிகளை மேம்படுத்துதல் மற்றும் வறுமை குறைப்புக்கான செயல்திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய பொருளாதார சீர்திருத்த திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

2. நிதிநிலை சீரமைப்பு மற்றும் நிலை நிறுத்தப்பட்ட பொது நிதி நிர்வாகம் ஆகியவற்றின் அடிப்படையில் தான் புதிய பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தை செயலாக்க முடியும். உயரிய மூலதன ஒதுக்கீடுகள், இயக்கம் மற்றும் பராமரிப்புக்கான மேம்பட்ட நிதி ஒதுக்கங்கள், சமூகப் பாதுகாப்பிற்கான நிதி ஒதுக்கங்களை பேணிக் காத்தல் ஆகியவைகளை உறுதி செய்யத்தக்க நடுத்தரகால நிதித் திட்டம் ஒன்றினை வகுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. 2000—2001 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைப் பற்றிய நிதி இடர்ப்பாடு, மிகுந்த சிக்கலானதாகவும் ஆழமாக வேரூன்றியதாகவும் அமைந்த காரணத்தினாலும் நடுத்தரகால நிதித் திட்டத்தை வகுப்பது அவசியமாகி உள்ளது.

3. நிதி இடர்ப்பாட்டின் தன்மையை உணர்ந்து 18—8—2001—ல் தமிழ்நாடு அரசின் நிதி நிலைமை பற்றிய வெள்ளை அறிக்கை ஒன்று சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. நிதி இடர்ப்பாட்டின் சிக்கலான தன்மை, மாநிலத்தின் பொது நிதி நிலைமையைப் பாதிக்கும் வேரூன்றிய அமைப்பு ரீதியான

[2004 பிப்ரவரி 11

பிரச்சினைகள் மற்றும் நிதி சீரமைப்புத் திட்டத்தின் அவசியம் ஆகியவற்றை இந்த அறிக்கை தெளிவாக எடுத்துரைத்தது. 10 ஆண்டுகளுக்கான நிதி நிலைமை பற்றிய சுருக்கக் குறிப்பு கீழே அட்டவணை—1 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 1: கடந்த 10 ஆண்டுகளில் நிதி நிலைமை**

| கணக்கு ஆண்டு | 1990 -91 | 1991 -92 | 1992 -93 | 1993 -94 | 1994 -95 | 1995 -96 | 1996 -97 | 1997 -98 | 1998 -99 | 1999 -200 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | (ரூபாய் கோடியில்) | | | | | |
| வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை | 553 | 1904 | 1526 | 692 | 416 | 311 | 1104 | 1364 | 3436 | 4400 |
| நிதிப் பற்றாக்குறை | 1126 | 137.5* | 1824 | 1433 | 1496 | 125.5 | 244.5 | 2122 | 4777 | 5382 |
| | | | | | (சதவீதத்தில்) | | | | | |
| மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் வருவாய் பற்றாக்குறை | 10.88 | 28.1 | 21.75 | 8.58 | 4.51 | 2.93 | 9.23 | 10.04 | 24.09 | 26.95 |
| நிதிப் பற்றாக் குறையில் வருவாய் பற்றாக் குறை | 49.13 | 138.47* | 83.67 | 48.3 | 27.77 | 24.78 | 45.15 | 64.28 | 71.93 | 81.75 |
| மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை | 3.59 | 3.72 | 4.24 | 2.49 | 2.18 | 1.60 | 2.73 | 2.05 | 4.01 | 4.22 |
| மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் செலுத்தப் பட்ட வட்டித் தொகை | 8.95 | 8.22 | 9.81 | 11.86 | 11.82 | 12.20 | 12.34 | 12.98 | 14.88 | 16.60 |
| மூலதனச் செலவு (ரூபாய் கோடியில்) | 222.49 | 279.09 | 322.37 | 550.51 | 679.95 | 590.94 | 919.65 | 1467.79 | 1153.32 | 644.93 |

(இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் நிதிக் கணக்கின் அடிப்படையில்)

*(தமிழ்நாடு மின்சார வாரியம் 1991—92 ஆம் ஆண்டு ரூ.1109.99 கோடி அளவிற்கு கடன் தொகை திருப்பிச் செலுத்தியதால், அந்த ஆண்டில் நிதிப் பற்றாக்குறை வருவாய் பற்றாக்குறையை விட குறைந்து காணப்பட்டுள்ளது)



2004 பிப்ரவரி 11]

4. நிதி மேலாண்மையை சரிவர கையாளவில்லையெனில் அதன் பின்விளைவுகள் மிகவும் மோசமானதாக இருக்கும். மாநிலத்தின் மூலதன செலவுகள் இதனால் பெருமளவுக்கு குறைந்து விட்டன. மேலும் இயக்கம் மற்றும் பராமரிப்பு செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு படிப்படியாக குறைந்துவிடும் நிலையும் ஏற்பட்டது. அரசின் சொத்துக்கள் தரமிழந்து போகும் நிலையும் ஏற்பட்டது. புதிய கட்டமைப்புகளை உருவாக்கும் பணி, போதிய முதலீடுகள் இல்லாத காரணத்தினால் பெருமளவில் தடைபட்டது. உலகமயமாக ஒருங்கிணைக்கப்பட்டுவரும் தற்போதைய நிலையில், உலகத்தரம் மிக்க கட்டமைப்பு வசதிகள் போதிய அளவில் இல்லாது இருப்பது மாநிலத்தில் முதலீட்டுச் சூழல் பாதிப்படைந்ததற்கு மூல காரணமாக அமைந்துவிட்டது. கட்டமைப்பு பணிகளில் பொதுத்துறை முதலீடுகளை வெகுவாக உயர்த்தவேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக பெரும் இடர்ப்பாடாக உருவெடுத்து நிலை குலைந்த மாநில நிதி நிலைமை, கட்டமைப்புப் பணிகளில் இத்தகைய முதலீடுகளை பின்னடையச் செய்துவிட்டது. அதே போன்று இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான நிதி ஒதுக்கமும் வெகுவாக பாதிக்கப்பட்டது.

5. 1990—1991 ஆம் ஆண்டில் மாநிலத்தில் ஏற்பட்ட இத்தகைய இடர்ப்பாடான நேரத்தில், அதிலிருந்து மீண்டு வெளியேறுவதற்காக, புதிய கடன் திரட்டுவதற்கான போதிய திறன் மாநில அரசுக்கு இருந்தது. மேலும் 1991—1992 ஆம் ஆண்டிலிருந்து நிதி நிலையை சீர்செய்யும் பொருட்டு நிதிச் சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் சாத்தியமாயிற்று. இதன் பயன்கள் 1995—1996 ஆம் ஆண்டில் வியக்கத்தக்க வகையில் நிதி நிலை சீரடைந்தபொழுது தெள்ளத் தெளிவாயின. இந்த நிலைமை கட்டமைப்புப் பணிகளிலும், இயக்கம் மற்றும் பராமரிப்பு பணிகளிலும் ஒதுக்கீடுகளை மேம்படுத்தத் தக்க ஏவு தளமாக அமைந்தது.

6. ஆனால் துரதிஷ்டவசமாக மீண்டும் 1998—1999 ஆம் ஆண்டு நிதி நிலைமை வெகு விரைவாக சீர் குலைந்து, 1999—2000 ஆம் ஆண்டில் மிகக் கடுமையாக நிலை குலைந்தது. மொத்த வருவாய்க் கணக்கு வருவாய்களில் வருவாய் பற்றாக்குறை 26.95 சதவீதமாக உயர்ந்தது. மொத்த நிதிப் பற்றாக்குறையில் வருவாய் பற்றாக்குறை உயரிய அளவில் 81.75 சதவீதமாக உயர்ந்தது. மொத்த வருவாய்க் கணக்கு வருவாய்களில் வட்டிச் செலவுகள் 16.6 சதவீதமாக உயர்ந்தது. ஆகையினால் பெருமளவில் புதிய கடன்களை திரட்டுவதற்கான வாய்ப்பு சிறிதளவும் அமையப்பெறவில்லை. மாநில மொத்த உற்பத்தி மதிப்பளவில் நிதிப் பற்றாக்குறை 4.22 சதவீதமாக உயர்ந்தது.

[2004 பிப்ரவரி 11

7. இதை அடுத்து 2000—2001 ஆம் ஆண்டில், பட்டியல்களுக்குத் தொகை வழங்க முடியாத அளவிற்கு, கடுமையான நிதி இடர்ப்பாட்டை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பதினொன்றாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், மத்திய வரி இனங்களில், மாநிலத்தின் பங்கு குறைந்ததால் இது மேலும் சிக்கலாகியது. 2000—2001 ஆம் ஆண்டில் ரூ.700 கோடி அளவிற்கு பட்டியல்களுக்குத் தொகை கொடுக்க முடியாதவாறு, நிலைமை மேலும் மோசமாயிற்று. இது ஒரு மாபெரும் நிதி நிலை சீர்குலைவு ஆகும்.

8. நிதி நிலையில் இத்தகைய நிலையற்ற போக்கின் பின்விளைவுகள், மிகக் கடுமையானதாக இருந்தன. முதலாவதாக, ஆளுகையின் அடித்தளத்தையே இது பாதித்தது. இரண்டாவதாக, பட்டியல்களுக்குக் குறித்த காலத்தில் தொகை வழங்குவதில், அரசு ஒரு முன்மாதிரியாகத் திகழும் என்ற நம்பிக்கை சந்தேகத்திற்கு உள்ளானது. நம்பகமற்ற நிலை ஒன்று கண்கூடாக உருவாகியது. மூன்றாவதாக, மாநிலத்தின் நடுத்தரக் கால பொருளாதார மேம்பாட்டினை வெகுவாகப் பாதிக்கும் வகையில் மூலதனச் செலவுகள் பாதிக்கப்பட்டன. நான்காவதாக, அரசுச் சொத்துக்களை சரிவர பராமரிக்க முடியாமல் போயிற்று. பராமரிப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கம் மேம்படுத்தப்படாததால், மூலதன சொத்துக்கள் அழியும் நிலைக்குத் தள்ளப்பட்டன. அனைத்திற்கும் மேலாக, ஏழை எளியோருக்கு சமூகப் பாதுகாப்பு அளிப்பது பெருமளவில் பாதிக்கப்பட்டு வெகுவாக குறைக்கப்பட வேண்டியதாயிற்று.

9. எதிர்கொள்ளப்பட்ட நிலைமையின் பெரும் அபாயத்தினையும், ஒட்டுமொத்தமாக சீர்குலையச் செய்யும் தன்மையினையும் கருத்தில் கொண்டு, திட்டமிட்டு செயல்படுத்தும் அணுகுமுறையை கையாண்டு நிதி நிலை நிலைப்பாட்டினை உறுதி செய்யவேண்டும் என்று இந்த அரசு உணர்ந்தது. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாக பொறுப்புடைமைச் சட்டம் (சட்டம் 16/2003) மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டத்தின் பிரிவு 3(1)ன் கீழ் சட்டமன்றப் பேரவைக்கு, வரவு—செலவு திட்டத்துடன், நடுத்தரகால நிதித் திட்டம் ஒன்றையும் மாநில அரசு அளிக்க வேண்டியுள்ளது. இந்தச் சட்டத்தின் பிரிவு 3(2)ன் படி ஒவ்வொரு ஆண்டிற்கும் மாறி



2004 பிப்ரவரி 11]

வரும் இலக்குகளாக வரையறுக்கப்பட்ட நிதி நிலை குறியீடுகளை உள்ளடக்கி இந்த நடுத்தர கால நிதி நிலைத் திட்டம் அமையப்பெற வேண்டும்.

10. அதன்படி நடுத்தரகால நிதித் திட்டம் தயாரிக்கப்பட்டு தற்போது சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கப்படுகிறது. 2008—2009 ஆம் ஆண்டுடன் முடிவடையும் காலகட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய நடுத்தரக்கால நிதித் திட்டத்தின் கூறுகளை இணைப்பு III விளக்குகிறது.

**நடுத்தரகால நிதித் திட்டத்தின் நோக்கங்கள்**

- 2007—2008 ஆம் ஆண்டிற்குள் மொத்த வருவாய்க் கணக்கு வருவாய்களில் வருவாய் பற்றாக்குறை 5 சதவீதத்திற்கும் கீழ் குறைப்பதற்குத் தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு, 2008—2009 ஆம் ஆண்டில் மாநிலத்தை மிகை வருவாய் கொண்ட மாநிலமாக ஆக்குதல். இந்த இலக்கினை, ஆதாயமற்ற வருவாயின செலவுகளைக் குறைப்பதன் மூலமும், சீர்திருத்த நடவடிக்கைகளின் மூலம் வருவாய்களைப் பெருக்கியும் அடைய வேண்டும்.
- 2007—2008 ஆம் ஆண்டிற்குள் மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் நிதிப் பற்றாக்குறை 3 சதவீத அளவிற்குள் குறைக்கப்படவேண்டும்.
- வளர்ச்சிக்கு உந்துவிசையாக அமையும் பயனுள்ள பொதுச் சொத்துக்களை உருவாக்குவதற்காக, கடன் பொறுப்புக்களை பயன்படுத்தும் வகையில், 2006—2007 ஆம் ஆண்டிற்குள் நிதிப் பற்றாக்குறையில் வருவாய் பற்றாக்குறை 35 சதவீதத்திற்கும் கீழே அமையுமாறு படிப்படியாக குறைக்கப்பட வேண்டும்.
- அரசு உத்திரவாதங்களை (Government Guarantees) பொறுத்தவரை அதன் ஆண்டு நிலுவை, மொத்த வருவாய்க் கணக்கு வருவாய்களில் 100 சதவீதமாகவோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 10 சதவீத அளவிலோ இவற்றில் எது குறைவாக உள்ளதோ அந்த அளவிற்கு அமையப்பெற வேண்டும். அரசு

உத்திரவாதங்களை மீளப்பெறும் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் (risk weighted guarantees) ஆண்டு நிலுவை, வருவாய் இன வருவாய்களில் 75 சதவீதத்திற்கு மிகாமலோ அல்லது மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் 7.5 சதவீதத்திலோ இதில் எது குறைவோ அந்த அளவிற்கு அமையப்பெற வேண்டும்.

- ஏழை எளியோருக்கு ஒட்டுமொத்த பாதுகாப்பு அளிப்பதற்குத் தக்க மேம்பாடுகளை உறுதி செய்து, வரவு—செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கங்கள், வளர்ச்சிப் பணிகள் மற்றும் வளர்ச்சி வாய்ப்பு மிகுந்த துறைகளுக்கு செல்லும் வகையில், முன்னுரிமைகளைத் திருத்தியமைக்க இந்த நடுத்தரகால நிதித் திட்டம் வழி வகுக்கிறது,
- நிதி மேலாண்மையில் உயரிய ஒளிவுமறைவற்ற தன்மை, தக்க பொறுப்பேற்றல் மற்றும் தெளிவான அறிக்கைகள் பெறுவது ஆகியவைகளை இந்தத் திட்டம் உறுதி செய்கிறது.
- தமிழ்நாடு மின்சார வாரியம், மாநில போக்குவரத்துக் கழகங்கள் மற்றும் ஏனைய பொதுத்துறை/கூட்டுறவுத் துறை நிறுவனங்கள் தன்னிறைவு பெற்று மாநில பொது நிதி நிலையை பாதிக்காதவாறு, பொதுத் துறையில் சீரமைப்பு நடவடிக்கைகள்.

11. அண்மைக்கால நிதி நிலைமை அட்டவணை II இல் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது. இது கடுமையான நிதிச்சுமையினையும் இம்மாநிலம் மிக மோசமான நிதி இடர்பாட்டிலிருந்து எவ்வாறு மெதுவாக மீண்டு வருகிறது என்பதையும் காட்டுகிறது.





## அட்டவணை II அண்மைக்கால நிதி நிலைமை

| கணக்கு ஆண்டு | 2001-02 | திருத்த மதிப்பீடு 2002-03 | 2002-03 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2003-04 | திருத்த மதிப்பீடு 2003-04 | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 2004-05 |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | | |
| வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை | 2739* | 5917# | 4851# | 3933 | 3700 | 3336 |
| நிதிப் பற்றாக்குறை | 4739 | 8105 | 6742 | 6944 | 7696@ | 6922 |
| | (சதவீதத்தில்) | | | | | |
| மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் வருவாய் பற்றாக்குறை | 14.56* | 28.60# | 23.28# | 17.35 | 16.19 | 13.46 |
| நிதிப் பற்றாக்குறையில் வருவாய் பற்றாக்குறை | 57.80* | 73.00# | 71.95# | 56.64 | 48.07 | 48.20 |
| மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை | 3.24 | 5.14 | 4.39 | 4.07 | 4.64@ | 3.86 |
| மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளில் செலுத்தப்பட்ட வட்டித் தொகை | 18.67 | 20.30 | 19.84 | 20.06 | 20.46 | 21.09 |
| மூலதனச் செலவு (ரூபாய் கோடியில்) | 1777.91 | 1727.18 | 1627.54 | 2556.59 | 3782.33@ | 3335.01 |

ஆதாரம்: இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் நிதிக்கணக்குகள் மற்றும் ஆண்டு நிதிநிலை அறிக்கையும்.

( * 2000—2001, மற்றும் 2001—2002 ஆம் ஆண்டுகளில் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை விபரங்கள் தோராயமாகக் காட்டப்பட்டுள்ளன. ஏனெனில், முன் எப்போதுமில்லாத வகையில், வருவாய் குறைந்துள்ளதால், நிதி ஆண்டு முடிவடைவதற்கு முன்னரே மாநில அரசால் தன்னுடைய செலவுப் பொறுப்புக்களை முழுவதுமாகத் தீர்க்க இயலாமல் போயிற்று.)

[2004 பிப்ரவரி 11

(# தமிழ்நாடு மின்சார வாரியம் மத்திய சேவை நிறுவனங்களுக்கு கொடுக்க வேண்டிய தொகைகளுக்கான ரூபாய் 1962.14 கோடி அளவிற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உதவி தொகை வழங்கப்பட்டதால் 2002—2003 ஆம் ஆண்டிற்கான வருவாய்ப் பற்றாக்குறை உயரளவாக உள்ளது. அரசுக்கு இந்தக் கடன்களைக் கொடுத்துத் தீர்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதால் இந்த அளவுக்கு அரசின் கடன் பொறுப்புகளும் கூடியுள்ளன. இது நீங்கலாக, 2002—2003 ஆம் ஆண்டிற்கான மொத்த வருவாய்க் கணக்கு வரவுகளின் பங்காக வருவாய்ப் பற்றாக்குறை 13.86 சதவீதம்.)

(@ 'டிட்கோ' (TIDCO) நிறுவனம் ஈட்டிய ரூபாய் 1423.38 கோடி கடன் பத்திரங்களுக்கான முந்தைய ஆண்டுகளுக்கான மூலதனச் செலவின் சரிக்கட்டுதலின் விளைவாக 2003—2004 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் நிதிப் பற்றாக்குறை அதிகமாக உள்ளது. இந்த கடன்பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதால் அரசின் கடன்பொறுப்பு சம அளவில் கூடிவிட்டது. இது நீங்கலாக, 2003—2004 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டின்படி மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் நிதிப்பற்றாக்குறையின் பங்கு 3.78 சதவீதமாக இருந்தது.)

## அணுகுமுறைகள்

12. சமுதாயத்தில் ஏழை—எளியவர்கள் மற்றும் வாய்ப்பிழந்த பிரிவினரின் நலன்களைப் பாதிக்காத வகையில் நிதிச் சமநிலையற்ற தன்மையை சரிப்படுத்துவதே நடுத்தரகால நிதித் திட்டத்தின் வழிகாட்டிக் கொள்கையாகும். பின்வரும் அணுகுமுறைகளை பின்பற்றுவதன் மூலம் இதனை எய்த இயலும்.

- சம்பளம், ஓய்வூதியம், வட்டித் தொகை, உதவி மானியம், உதவித் தொகை போன்ற செலவினங்களைக் கட்டுப்படுத்துவதன் மூலம் ஆதாயமற்ற வருவாயினச் செலவுகளின் வளர்ச்சி வேகத்தை கட்டுப்படுத்துவது.
- மின் ஆளுகையில் வரிவசூல் அமைப்பினை சீரமைத்து, நவீனப்படுத்தி, வசூல் செலவுகளைக் குறைத்து வரி செலுத்தும் முறையை எளிமையாக்கி அரசின் வருவாய் வரவுகளை பெருக்குதல்.



2004 பிப்ரவரி 11]

- மாநிலத்தின் புத்தாயிர வளர்ச்சி இலக்குகளை, இலக்கிட்ட காலத்திற்கு முன்னரே அடையும் வகையில் வரவு—செலவுத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடுகளை திருத்தியமைத்து முன்னுரிமைத் துறைகளுக்கு சென்றடையுமாறு செய்தல்.

13. புதிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், பொதுச் சொத்துக்களை சரிவர பராமரித்தல், ஏழை எளியோருக்கு உண்மையான பாதுகாப்பு அளித்தல் ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும் நிலை நிறுத்தப்பட்ட பொதுநிதி நிலைமையை அடைவதே நடுத்தரகால நிதித் திட்டத்தின் மைய நோக்கமாகும். நிதிநிலையினை ஒட்டுமொத்தமாக ஆய்வு செய்ததில் மாநிலத்தில் நடுத்தரகால அளவிலான நிதி சீரமைப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதை தமிழ்நாடு அரசு உணர்ந்துள்ளது. இத்திட்டம் வருவாய்ப் பற்றாக்குறையின் அளவை படிப்படியாக குறைப்பதை முக்கியக் கூறாகக் கொண்டிருக்கும். மூலதனச் செலவினை மேம்படுத்த வேண்டும் என்ற கொள்கை வெளியீட்டை எய்துவதற்கு வருவாய்ப் பற்றாக் குறை குறைக்கப்பட வேண்டும். பொதுத்துறையில் மூலதனச் செலவுகள் மேலும் பெருமளவு தேவைப்படுகின்றன. சாலைகளுக்கான முதலீடு கணிசமாக உயர்த்தப்பட வேண்டும். குடிநீர் வழங்கல், கழிவு நீரகற்றுதல் போன்ற ஏனைய நகர்ப்புற கட்டமைப்பு வசதிகளுக்கான முதலீடு அதிகரிக்கப்பட வேண்டும். இவை அனைத்தும் கடன் நிதிகளை வளர்ச்சியைத் தூண்டும் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தவேண்டும் என்பதையும் நடப்பு செலவுகளுக்கு கடன் நிதிகளை செலவிடும் போக்கினை கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகின்றன. இக்காரணத்தினாலேயே வருவாய்ப் பற்றாக்குறையைச் சீரமைக்க நடுத்தரகால நிதித் திட்டம் உயர் முக்கியத்துவம் அளிக்கிறது.

14. வருவாய் கணக்கில் செலவுகள் வரவுகளைக் காட்டிலும் அதிகமாக இருக்கும்போது அவ்வாறு கூடுதலாக நிற்கும் செலவின் அளவே வருவாய்ப் பற்றாக்குறையாகும். வருவாய் வரவு கீழே குறிப்பிட்ட பொதுவான இனங்களைக் கொண்டதாக இருக்கும்:

1. மத்திய வரிகளின் பங்கு
2. மாநில அரசின் சொந்த வரி வருவாய்
3. வரியல்லாத வருவாய்
4. உதவி மானியங்கள்

15. மத்திய அரசின் வரிகளின் பங்கு நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அமைகிறது. பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப் பட்டவுடன் ஐந்து ஆண்டுகால அளவிற்கு நிலைபெற்று விடுகின்றன. அடுத்த திருத்தம் 2005–2010 கால அளவிற்குரியதாகும். 2000–2005 கால அளவிற்கான திருத்தத்தின்போது மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு பெரிதும் குறைந்துவிட்டது. இதனால் 2000–2001 ஆம் ஆண்டிலிருந்து இம்மாநிலம் மிகக் கடுமையான நிதி நெருக்கடி நிலையை எதிர் கொண்டது. இந்த போக்கினை சரி செய்ய வலுவான முறையீடு செய்யப்பட்டுள்ளது. 2005–2010 கால அளவில் மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு நியாயமான அளவு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வகையில், நடுத்தரகால நிதித்திட்டம் நியாயமான கணிப்புகளைக் கொண்டுள்ளது.

16. தமிழ்நாடு, வரி வருவாயை உயர்த்துவதில் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது. மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் சதவீதம், நாட்டிலேயே மிகவும் அதிகமானதாகும். மாநிலத்தின் சொந்த வரி வருவாய் மீதான நடவடிக்கைகள் அதனை எளிமையாக்குவதாகவும், ஒளிவு மறைவற்றதாக ஆக்குவதாகவும் மேம்பட்ட அளவில் வரி செலுத்தவைக்கக் கூடியதாகவும் இருக்கும். இந்த முயற்சியை உள்ளிட்ட வருங்கால கணிப்பு வலுவானதாக இருக்கும். முதலீடுகளுக்கு தேர்விடமாக மாநிலம் அடைந்துள்ள ஒப்பீட்டு நிலையை மேலும் வலுப்படுத்துவதற்கும் வரி வருவாயில் தக்க வளர்ச்சியை உறுதி செய்யும் வகையிலும் வரி சீராய்வு மற்றும் எளிமையாக்கும் பல நடவடிக்கைகளை ஏற்கனவே தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. டாக்டர் ராஜா J. செல்லையா அவர்களின் தலைமையில் அமைந்த வரி சீர்திருத்தம் மற்றும் வருவாய்ப் பெருக்க ஆணையத்தின் பரிந்துரைகளின் அடிப்படையில் செயல்பட அரசு விழைகின்றது. இந்தப் பரிந்துரைகள் மாநில வரிகளின் அனைத்து இனங்களுக்கும் பொருந்தும். இதுவரை, வேளாண்மை வருமான வரி, மின் தீர்வை மற்றும் மின் பயன்பாட்டிற்கான வரி, முத்திரைத் தாள் தீர்வை, பத்திரப்பதிவுக் கட்டணங்கள் ஆகியவை தொடர்பான பரிந்துரைகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, மதிப்புக் கூட்டப்பட்ட வரி ஏற்பாட்டு முறையைப் பின்பற்றுவதற்கான ஆயத்தப் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மதிப்புக் கூட்டப்பட்ட வரியைப் பற்றிய, தேசிய அளவிலான ஒருமித்த கருத்தின் அடிப்படையில், விற்பனை வரி, நுழைவு வரி, மத்திய விற்பனை வரி, கூடுதல் விற்பனை வரி, விற்பனை வரி மீதான மேல்வரி ஆகியவை பற்றிய ஒட்டுமொத்த நடவடிக்கை எடுக்கப்படும். விற்பனை வரிகளைப் பொறுத்தமட்டில் நடுத்தரகால திட்டத்தின் கணிப்புகள் தற்போதைய கட்டமைப்பின் கீழான வரிவீதங்களின் அடிப்படையில் உள்ளன.



17. வரியல்லாத வருவாயைப் பொறுத்தமட்டில், அரசின் சேவைப்பணிகளுக்கு போதிய கட்டணங்களை விதிப்பதன் மூலம் நிதியாதரங்களைத் திரட்டுவதற்கு வாய்ப்பிருக்கிறது. பொருளாதாரப் பணிகளைப் பொறுத்தமட்டில் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு செலவழித்தது போக மூலதனப் பணிகளுக்கு உபரி நிதி கிடைக்கும் வண்ணம் பயனீட்டாளர் கட்டணங்களை படிப்படியாக உயர்த்தி விதிப்பதை அரசு கருதலாம். சமூகப் பணிகளைப் பொறுத்தவரையில் ஏழை எளிய மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் பயனீட்டாளர் கட்டணங்கள் மற்றும் அவைகளை உயர்த்துவது போன்றவைகளை உன்னிப்பாக கவனிக்க வேண்டும். இவ்வகையில் விரிவான பொதுக் கலந்தாய்வின் அடிப்படையில் தகுந்த முன்னேற்றம் காண்பதற்கு சீரமைத்து ஏற்ற நடைமுறைத் தீர்வுகளை காண இயலும்.

18. உதவி மானியங்கள் மத்திய அரசின் ஒதுக்கீடுகள் மூலம் நிர்ணயிக்கப்படுகின்றன. கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த உதவி மானியங்களை அரசு கட்டுப்படுத்த இயலாது. எனினும், வெளிநாட்டு உதவிபெறும் திட்டங்களுக்கு மத்திய அரசின் நிதியுதவி பற்றிய தற்போதைய ஏற்பாடுகளின் அடிப்படையில் பெருமளவு மானிய நிதியுதவி பெறுவதற்காக குறிப்பிட்ட திட்டங்களுக்கான நிதியுதவிகளைப் பெறுவதற்கு இந்த அரசு முழு முயற்சி எடுக்கும்.

19. ஆதாயமற்ற செலவினங்களை விரைவாக குறைத்து செலவைக் கட்டுப்படுத்துவதைப் பொறுத்தே நடுத்தரகால நிதித்திட்டத்தின் வெற்றி அமையும். பணிச் சேவைகளை அளிப்பதற்காக செலவு மற்றும் பெறப்படும் பயன்களின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் துறைவாரியாக மறு ஆய்வு செய்வதற்கு செலவு மறு ஆய்வு நிலைக் குழு

ஒன்று அமைக்கப்படும். செலவினங்களில் சேமிப்பை கண்டறிவதற்கு இது உதவும்.

20. நிதிச் சீரமைப்பை மேற்கொள்கையில் எழுகின்ற மிக முக்கியமான ஒரு பிரச்சனை சம்பளங்கள் மற்றும் ஓய்வூதியங்கள் குறித்த செலவாகும். சம்பளங்கள் வகையிலான செலவு மட்டும் 2003—2004 திருத்த மதிப்பீட்டில் மொத்த வருவாய் வரவுகளில் 39.03 சதவீதம் ஆகும். மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் சம்பளங்கள் வகையிலான செலவு 2003—2004 திருத்த மதிப்பீட்டில் 55.95 சதவீதம் ஆகும். அரசுத் துறைகளில் பணியாளர்களின் எண்ணிக்கையை, தேவையான அளவுடையதாக ஆக்குவது, நடுத்தரகால நிதித் திட்டத்தின் ஒரு பகுதியாகும். சில மிக முக்கியமான பணியிடங்களைத் தவிர, ஏனைய பணியிடங்களை நிரப்பாமலும், புதிய பணியிடங்கள் ஏற்படுத்துவதை கண்டிப்பாக கட்டுப்படுத்தியும், இதனை எய்த முடியும். பணியாளர்கள் தங்களுடைய சொந்த விருப்பத்தின் பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதை விரைவுபடுத்துவதும் ஆராயப்படலாம். நிதிச் சமன்பாட்டை மீளப்பெறுவதற்கு வெளிச்சந்தையில் சமமான வகைப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத்தை ஒத்து அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் மொத்த ஊதியம் கட்டுப்படுத்தப்படவேண்டும். 2008—2009 ஆண்டு வாக்கில் மொத்த வருவாய் வரவுகளில் சம்பளம் குறித்த செலவினம் 31.58 சதவீதம் என்கிற நடுத்தரகால நிதித் திட்ட இலக்கினை எய்துவதற்கு இவ்வகையான முனைப்பான முயற்சிகள் பெரிதும் உதவும். 2008—2009 வாக்கில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் சம்பளம் குறித்த செலவு 43.99 சதவீதமாக அமையும்.

21. வருவாய் பற்றாக்குறையின் பின்னணியில் ஓய்வூதியங்கள் வகையிலான தற்போதைய செலவுகளைத் தொடர்ந்து மேற்கொள்ள இயலாது. ஓய்வூதியச் செலவின் காரணமாக மேலும் நெருக்கடி ஏற்படும் என்பதை ஓய்வு பெறவிருப்போர் பற்றிய துல்லிய மதிப்பீடு குறிப்பிடுகிறது. இந்த செலவுப் போக்கை கட்டுப்படுத்துவதற்கு சில பெரிய மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1.4.2003 முதல் புதிய பணியாளர்கள் அனைவருக்கும் புதியதொரு பங்களிப்பு முறையிலான ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஓய்வூதியச் செலவினைத் தொடர்ந்து மேற்கொள்ள இது வகை செய்யும் அதே





நேரத்தில் நடுத்தரகால அளவில்கூட நிதிநிலையில் எந்தவித நிவாரணத்தையும் அளிக்காது. பெருகிவரும் செலவினைக் கட்டுப்படுத்த தற்போது உள்ள ஓய்வுகாலப் பயன் திட்டத்தில் அளவுகோல் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. சில அளவுகோல் மாற்றங்கள், நீதிமன்றத்தில் எதிர்க்கப்பட்டுள்ளதால் நடைமுறைக்கு கொண்டு வரப்படவில்லை. இவற்றிற்குத் தீர்வு காண்பது நமது கடமையாகும். முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு, ஓய்வூதியத்தைக் கூட்டித் தரும்போக்கை நிறுத்தி வாழ்க்கைத்தரச் செலவுக் குறியீட்டு புள்ளிகளின் அடிப்படையிலான உயர்வு மட்டுமே வழங்கப்படவேண்டும். 2003—2004 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் மொத்த வருவாய் வரவில் 15.91 சதவீதமாக இருக்கும் ஓய்வூதியங்கள், 2008—2009 ஆம் ஆண்டுவாக்கில் 18.01 சதவீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2003—2004 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் மாநிலத்தின் சொந்த வரி வருவாயில் ஓய்வூதியம் 22.80 சதவீதமாக உள்ளது. இது 2008—2009 ஆம் ஆண்டு வாக்கில் 25.09 சதவீதமாக நிலையாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வகையில் மொத்தச் செலவு தொடர்ந்து அதிகமாக இருந்து நிதிநிலைச் சீரமைப்பினைக் காலந்தாழ்த்தி வருகிறது. நடுத்தர காலகட்டத்தில்கூட இதனை சரிசெய்வதற்கு வாய்ப்புகள் ஏதுமில்லை.

22. வட்டிச்சுமை மற்றொரு முக்கியமான செலவினமாகும். இதில் இருமுனை அணுகுமுறை பின்பற்றப்படும். வட்டி வீதங்களை மாற்றி அமைப்பதன் மூலமாகவோ அல்லது உயர் வட்டி கொண்ட கடன்கள் மீதான வட்டி விகிதத்தை குறைப்பதன் மூலமாகவோ நிலுவையிலுள்ள கடன்களுக்கான வட்டிச் செலவு குறைக்கப்படும். வளர்ச்சித் தேவைக்கேற்ற அளவிற்கு புதிய கடன்களை கட்டுப்படுத்துவது இரண்டாவது அணுகுமுறை கடன் பொறுப்புகளைத் தொடர்ந்து மேற்கொள்வது தொடர்ந்து கண்காணிக்கப்படும். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டம், நிதிப் பற்றாக்குறைக்கான நடுத்தரக் கால இலக்கு, மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதமாக இருக்க வேண்டும் எனக்குறிக்கிறது. இந்த இலக்கு 2007—2008 ஆம் ஆண்டு வாக்கில் எய்தப்பட்டு அதன் பின்னர் அதே நிலையில் வைத்திருக்கப்படவேண்டும். இவ்வாறு, மாநில மொத்த உற்பத்தி மதிப்பிற்கு ஏற்ப புதிய கடன்களைக் கவனமாகக்

[2004 பிப்ரவரி 11

கட்டுப்படுத்துவதன் மூலம் வட்டிச் சுமை கட்டுப்பாட்டில் வைக்கப்படும். 1995—1996 ஆம் ஆண்டில் மொத்த வருவாய் வரவுகளில் வட்டிச் சுமை வீதம் 12.2 சதவீதமாக இருந்தது. 2002—2003 இல் 19.84 சதவீத அளவிற்கு உயர்ந்தது. நடுத்தரகால நிதித் திட்டம் இப்போக்கினை கட்டுப்படுத்தி 22 சதவீதத்தில் நிலைநிறுத்தி மேலும் குறைப்பதற்கு வழிவகுக்கும்.

**பலன்கள்**

23. நடுத்தரகால நிதித் திட்டத்தின் பலன்கள் மிகவும் முற்போக்கானதாக இருக்கும். இது, முன்னுரிமைத் துறைகளுக்கு வருவாய் ஆதாரங்களை மறு ஒதுக்கீடு செய்யும். ஆதாயமில்லாச் செலவுகளை ஒதுக்கிவிடும். முக்கியமான பலன்கள் பின்வருமாறு:—

- நிதி நிலை திருத்தத்தோடு, கல்வி, சுகாதாரம், குடும்ப நலன், சத்துணவு, குடிநீர், துப்புரவுப் பணிகள், சாலைகள் மற்றும் பாசன ஏற்பாடுகளைப் பராமரித்தல் போன்ற முதன்மைத் துறைகளுக்கு, நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

- மந்தநிலையில் உறைந்துவிட்ட மூலதனமும் 2002—2003 ஆம் ஆண்டில் ரூபாய் 1627.54 கோடி என்ற அளவிலிருந்து உயர்ந்து 2008—2009 ஆம் ஆண்டில் ரூபாய் 5050.14 கோடி அளவிற்கு அதிகரிக்கும். 2002—2003 ஆம் ஆண்டில் 5.96 சதவீதத்திலிருக்கும் மொத்த செலவின் ஒரு சதவீதமான இந்த மூலதனச் செலவு, (நிகர கடன் மற்றும் முன்பணங்கள் நீங்கலாக) 2008—2009 ஆம் ஆண்டில் 12.64 சதவீத அளவிற்கு அதிகரிக்கும்.

- 2001—2002 ஆம் ஆண்டில் மொத்த வருவாயினச் செலவின் ஒரு சதவீதமாக 7.8 சதவீதத்திலிருக்கும் ஊதியம் அல்லாத இயக்கம் மற்றும் பராமரிப்பிற்கான ஒதுக்கீடு, 2008—2009 ஆம் ஆண்டில் 10.6 சதவீதமாக உயரும். பொதுச் சொத்துக்களைசிறந்த முறையில் பராமரிப்பதை இது உறுதி செய்யும்.



2004 பிப்ரவரி 11]

24. மொத்தத்தில், நடுத்தரகால நிதித் திட்டம் வருவாய்ப் பற்றாக்குறையை படிப்படியாக குறைத்து, 2008—2009 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தின் வருவாயில் உபரியை ஏற்படுத்தும் என கணித்துள்ளது. மாநிலம் 2006—2007 ஆம் ஆண்டில் வட்டிச் செலவைக் கணக்கில் கொள்ளாத நிலையில், உபரியை (Primary Surplus) எய்திவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2006—2007 ஆம் ஆண்டில் வட்டிச் செலவிற்குப் போதுமான வருவாய் ஆதாரத்தை பெறமுடியும் என்பதை இது காட்டுகிறது. மாநிலத்தின் மொத்த உற்பத்தியின் பங்காக கடன் பளு (வரவு—செலவுத் திட்டம் சாரா கடன் உட்பட) 1996—1997 ல் 16.3 சதவீதமாக இருந்து, 2002—2003 ஆம் ஆண்டில் 28.8 சதவீதமாக அதிகரித்தது. நடுத்தரகால நிதித் திட்ட கால அளவில் தேவைக்கேற்ற அளவில் கடன் வாங்கப்பட்டு 2008—2009 ஆம் ஆண்டில் இந்த வீதாச்சாரம் 29.9 சதவீதமாக நிலைபடுத்தப்படும். 2002—2003 ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தியில் 4.5 சதவீதமாக இருக்கும் நிதிப் பற்றாக்குறை 2008—2009 ஆம் ஆண்டில் 3 சதவீதமாகக் குறைக்கப்படும்.

25. சென்ற இரண்டாண்டுகளில், பெரிய அளவில் நிதிச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள பின்னணியில், நடுத்தர கால நிதித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள், எய்தத் தக்கவையாகவும், கணிப்புகள் சரியானதாகவும் இருப்பது தெரியவரும்.

## 2003–2004 ஆம் ஆண்டின் போக்குகள்

### வருவாய் வரவுகள்

26. 2003—2004 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில், மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் 22,665.90 கோடியாகும். 2003 டிசம்பருடன் முடிவடைந்த காலாண்டிற்கான உத்தேசக் கணக்குகளின்படி மாநிலத்தின் மொத்த வருவாய் வரவுகள் ரூபாய் 15,867.26 கோடியாகும். இது, வரவு—செலவுத் திட்ட மதிப்பீட்டில் 70 சதவீதமாகும். பின்வரும் அட்டவணை மொத்த வருவாய் வரவுக் கூறுகளின் விவரங்களைத் தருகிறது.

[2004 பிப்ரவரி 11

## அட்டவணை III

### நடுத்தர கால நிதித் திட்டம்

### 2003-2004 ஆம் ஆண்டு நிலவரம்

*31-12-2003 ஆம் நாள் வரையில் தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகளின் நிலவரம்*

| | | 2003-04 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 31-12-2003 வரையிலான உத்தேசக் கணக்குகள் | வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின் சதவீதம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | |
| 1. | மத்திய வரிகளில் பங்கு | 3435.01 | 1831.88 | 53.33 |
| 2. | மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | 15832.94 | 11956.17 | 75.51 |
| 3. | மாநிலத்தின் வரியல்லாத வருவாய் | 1506.14 | 1167.38 | 77.51 |
| 4. | மத்திய அரசின் உதவி மானியம் | 1891.81 | 911.83 | 48.20 |
| 5. | மொத்த வருவாய் வரவு | 22665.90 | 15867.26 | 70.00 |

27. மத்திய அரசின் நிதிமாற்றங்கள் நீங்கலாக (வரி மற்றும் வரி அல்லாத வருவாய் உள்ளிட்ட) மாநிலத்தின் சொந்த வருவாய் திருப்திகரமாகவும் இலக்கினை ஒத்தும் உள்ளதை அட்டவணை தெளிவாகக் காட்டுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மத்திய அரசு தெரிவித்த அளவைக் காட்டிலும் மத்திய வரியில் மாநிலத்தின் பங்கு குறைந்த அளவில்தான் இறுதியில் கொடுக்கப்பட்டது. தற்போதைய குறியீடுகளின்படி 2003—2004 ஆம் ஆண்டில் இவ்வகையில் குறைபாடு இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகிறது.



2004 பிப்ரவரி 11]

### செலவுகள்

28. 2003—2004 ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டம் ரூபாய் 29,155.96 கோடிக்கு வருவாய் மற்றும் மூலதனச் செலவிற்கு (நிகர கடன் மற்றும் முன்பணங்கள் நீங்கலாக) வகை செய்கிறது. 2003 டிசம்பர் இறுதிவரையில் உத்தேசக் கணக்குகளின்படி மொத்த வருவாய் மற்றும் மூலதனச் செலவு ரூபாய் 17,886.21 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, வரவு—செலவுத் திட்டத்தின்கீழ் வருவாய்ச் செலவு மற்றும் மூலதனச் செலவிற்கான மொத்த நிதியொதுக்கத்தில் 61.35 சதவீதமாகும். வருவாய்ச் செலவுகளைக் கட்டுப்படுத்தியதன் மூலம் வரவு—செலவுத் திட்டப்படியான வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் நிதிப் பற்றாக்குறையின் அளவு திருத்த மதிப்பீடுகளில் குறைக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில் 2003—2004 ஆம் ஆண்டின் தற்போதைய நிதிநிலை நிலவரப்படி நடுத்தரகால நிதித் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் எய்தப்பட்டுவிடும்.

## அட்டவணை - III : நடுத்தர கால நிதித் திட்டம்

| பிப்ரவரி 11, 2004 | 2002/03 | 2003/04 (proj.) | 2003/04(RE) | 2004/05 (proj.) | 2004/05(BE) | 2005/06 | 2006/07 | 2007/08 | 2008/09 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தற்போதைய விலையில் ரூபாய் கோடியில் | | | | | | | (கணிக்கப்பட்டவை) | | |
| மொத்த வருவாய் வரவு (TRR) | 20456.32 | 22148.49 | 22567.30 | 24038.94 | 24538.35 | 26608.78 | 29096.43 | 31892.80 | 34943.50 |
| மாநிலத்தின் சொந்த வருவாய் (SOR) | 15821.91 | 17052.67 | 17470.40 | 18585.28 | 19084.59 | 20283.29 | 22226.53 | 24431.10 | 26838.45 |
| வரி (SOTR) | 14341.71 | 15832.94 | 15941.67 | 17159.12 | 17438.65 | 18788.36 | 20608.76 | 22734.36 | 25082.56 |
| வரி அல்லாதவை | 1480.21 | 1219.73 | 1528.73 | 1426.15 | 1645.95 | 1494.93 | 1617.77 | 1696.74 | 1755.89 |
| மத்திய அரசிடமிருந்து மாற்றப்பட்டவை | 4634.41 | 5095.83 | 5096.90 | 5453.67 | 5453.76 | 6325.50 | 6869.90 | 7461.70 | 8105.05 |
| பங்கிடப்பட்ட வரிகள் | 3047.57 | 3435.01 | 3435.01 | 3709.81 | 3709.82 | 4407.26 | 4759.84 | 5140.62 | 5551.87 |
| உதவி மானியம் | 1586.84 | 1660.82 | 1661.89 | 1743.86 | 1743.94 | 1918.24 | 2110.07 | 2321.07 | 2553.18 |
| மொத்த வருவாய்ச் செலவு | 25106.26 | 25880.92 | 26084.38 | 27433.86 | 27688.01 | 29505.33 | 30666.91 | 32738.04 | 34903.01 |
| வட்டியல்லாத செலவு | 23314.82 | 24291.19 | 23985.80 | 25532.18 | 26046.16 | 27252.21 | 28519.02 | 30647.41 | 32634.18 |
| சம்பளங்கள் (கல்விக்கான மத்திய அரசின் உதவி உட்பட) | 7980.69 | 8676.65 | 8919.68 | 9145.03 | 9478.63 | 9611.40 | 10057.12 | 10493.24 | 11034.79 |
| சம்பளங்களும் ஓய்வூக்காலப்பலன்களும் | 3337.25 | 4021.23 | 3634.61 | 4520.21 | 4414.43 | 5213.42 | 5330.34 | 5861.57 | 6293.35 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும் பராமரிப்புகளும் | 2143.89 | 2498.07 | 2664.36 | 2741.54 | 2874.64 | 2912.58 | 3096.30 | 3373.80 | 3711.18 |
| உதவித் தொகைகளும் நிதி மாற்றங்களும் | 7513.92 | 6008.94 | 6184.14 | 5727.75 | 5683.79 | 5940.76 | 5724.73 | 5906.73 | 6131.15 |
| ஏனைய வருவாய்ச் செலவினங்கள் | 23.15 | 26.76 | 9.51 | 28.10 | 9.33 | 29.51 | 30.98 | 32.53 | 59.16 |
| மூலதன முதலீடு | 2051.95 | 2555.14 | 2358.95 | 2945.14 | 3335.01 | 3275.14 | 3900.14 | 4650.14 | 5050.14 |
| நிகரக் கடன் வழங்கல் | 263.96 | 504.40 | 214.55 | 424.40 | 250.33 | 269.40 | 379.40 | 329.40 | 354.40 |
| நிதி அளவீடுகள் | | | | | | | | | |
| முதன்மைத் துறை உபரி (+)/ பற்றாக்குறை (-) | -2858.50 | -2142.69 | -1418.50 | -1493.24 | -1507.81 | -643.42 | 577.41 | 1245.39 | 2309.33 |
| வட்டி வழங்கல் | 4107.35 | 4649.28 | 4672.08 | 5271.22 | 5227.19 | 5797.66 | 6427.43 | 7070.17 | 7673.37 |
| மொத்த வருவாய் வரவுகளைவிட அதிகமாக வழங்கப்பட்ட வட்டித் தொகை | 20.1% | 21.0% | 20.7% | 21.9% | 21.3% | 21.8% | 22.1% | 22.2% | 22.0% |
| வருவாய் உபரி (+)/பற்றாக்குறை (-) | -4649.93 | -3732.43 | -3517.08 | -3394.92 | -3149.66 | -2896.55 | -1570.48 | -845.25 | 40.49 |
| வருவாய் மொத்த வருவாய் வரவிற்கும் அதிகமாக உபரி (+)/பற்றாக்குறை (-) | -22.7% | -16.9% | -15.6% | -14.1% | -12.8% | -10.9% | -5.4% | -2.7% | 0.1% |
| வருவாய் மொத்த வருவாய் வரவிற்கும் அதிகமாக உபரி (+)/ பற்றாக்குறை (-) | 66.8% | 55.0% | 57.7% | 50.2% | 46.8% | 45.0% | 26.8% | 14.5% | -0.8% |
| நிதி உபரி (+)/பற்றாக்குறை (-) (சரிக்கட்டப்பட்டவை) | -6965.85 | -6791.97 | -6090.57 | -6764.46 | -6735.00 | -6441.09 | -5850.02 | -5824.79 | -5364.05 |
| நிதி உபரி (+)/பற்றாக்குறை (-) (சரிக்கட்டப்பட்டவை) மாநில மொத்த உற்பத்தி மதிப்பைவிட அதிகமாக | -4.5% | -4.1% | -3.7% | -3.8% | -3.8% | -3.3% | -2.8% | -2.5% | -2.1% |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பு (GSDP) | 153728.71 | 166027.01 | 166027.01 | 179309.17 | 179309.17 | 194550.45 | 212059.99 | 232205.89 | 254265.23 |
| ஆண்டு வளர்ச்சி - மாநில மொத்த உற்பத்தி மதிப்பு | 3.5% | 8.0% | 8.0% | 8.0% | 8.0% | 8.5% | 9.0% | 9.5% | 9.5% |
| தொகுக்கப்பட்ட கணக்கு * | | | | | | | | | |
| தொகுக்கப்பட்ட வருவாய் உபரி (+)/பற்றாக்குறை (-) | -3630.80 | -3654.21 | -3438.86 | -3239.08 | -2993.82 | -2535.70 | -1108.13 | 753.44 | 1773.77 |
| தொகுக்கப்பட்ட நிதி உபரி (+)/ பற்றாக்குறை (-) | -7397.07 | -8020.19 | -7318.79 | -7944.45 | -7914.99 | -7352.73 | -6367.07 | -5791.07 | -5304.01 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பைவிட அதிகமாக தொகுக்கப்பட்ட நிதி உபரி (+)/ பற்றாக்குறை (-) | -4.8% | -4.8% | -4.4% | -4.4% | -4.4% | -3.8% | -3.0% | -2.5% | -2.1% |

* இதில் மாநில வரவு-செலவுத் திட்டத்தில் தமிழ்நாடு மின்வாரியத்தின் நிதி செயல்பாட்டினையும் குறிக்கும். இவை, சரிக்கட்டப்பட்ட எண்கள் என்பதால் இந்த மதிப்பீடுகள் நிதிக் கணக்குகள் மற்றும் ஆண்டு நிதி விபர அறிக்கையுடன் பொருத்தமாக இருக்காது.

காப்பகம் 125087
V2:1:1,31 P04 P04.57.1